# தமிழ்

# பாலபாரதி

## வகுப்பு இரண்டு



Tele MANAS
National Tele Mental Health Programme
14416

# டெலி மானஸ் ஹெல்ப்லைன்

**டெலி-மானஸ் (டெலி மனநல உதவி மற்றும் மாநிலங்கள் முழுவதும் நெட்வொர்க்கிங்)**

**(14416 / 1800 - 89 - 14416)**

தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலிமானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப்படுகிறது. டெலிமானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண் மூலம் 24 X 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலிமானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.

## மனோதர்பன்

வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப் பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.

இப்பாடநூல் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மகாராஷ்டிரா, புனே தயாரித்த பாடத்திட்டம் மற்றும் பாடநிர்ணயத்தின்படி தயாரிக்கப்பட்டு, இப்பாடநூல் இந்நிறுவத்தின் மூலம் சரிபார்க்கப்பட்டது. அரசு தீர்மானம் எண் : அபயாஸ்-2116/(ப்ர எண் 43/16) எஸ்டி-4 நாள் 25/04/2016 இன் படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவின் 01/04/2025 ஆம் நாளின் கூட்டத்தில் இப்பாடநூலை 2025-2026 கல்வி ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்

# பாலபாரதி

## வகுப்பு இரண்டு




மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே - 411004.

பக்கத்தில் உள்ள சதுரத்தில் காணப்படும் விரைவுக் குறியீட்டை (Q.R.Code) ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கேன் செய்வதினால் உங்களுக்கு டிஜிட்டல் பாடநூல் மற்றும் பாடநூலில் உள்ள உட்பிரிவுகளுக்குத் தொடர்புடைய ஒலி, ஒளி, ஒலி-ஒளி வடிவிலான கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பெறலாம்.

முதல் பதிப்பு : 2026

© மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே - 411004.

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம் இப்பாடநூல் தொடர்பான அனைத்து உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள எந்தப் பகுதியையும் மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் ஆய்வுக்கழக இயக்குநரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறு உருவாக்கம் செய்யக்கூடாது.

## தமிழ் மொழிக்குழு

திருமதி. பானுமதி சங்கர், குழு தலைவர்
திருமதி. கீதா கிறிஸ்டோபர், உறுப்பினர்
திருமதி. சித்ரா பாலசுப்ரமணியன், அழைப்பு உறுப்பினர்
திருமதி. மரிய வசந்தா, அழைப்பு உறுப்பினர்
திரு. ஜோரிஸ் போஸ்கோ, அழைப்பு உறுப்பினர்
திரு. முருகையா சின்னகருப்பன், அழைப்பு உறுப்பினர்

சிறப்பு பங்களிப்பு:
திரு. ரெ. சிவா

முனைவர் துலசி பாரத் பூஷண்
உறுப்பினர் - செயலாளர் (C.B)

## மதிப்பாய்வு

திருமதி. எபனேசர் பிரேம் குமார் (தரஆய்வு)
திருமதி. வேணி பால்ராஜ் (தரஆய்வு)
திரு. எஸ். ஏ. கனகராஜ் (சட்ட நிபுணர்)
டாக்டர் ஜெயந்தி நாராயணன்
(CWSN நிபுணர்)

## ஒருங்கிணைப்பு:

முனைவர் துலசி பாரத் பூஷண்
சிறப்பு அதிகாரி - தெலுகு (C.B)
மகாராஷ்டிர மாநிலப் பாடநூல் கழகம், புனே.

## அட்டைப் படம்:

திரு. பட்டு இராமதாஸ் பாக்லே

## படங்கள்:

திரு. பாருக் நதாப்
திரு. ஸ்ரீநிவாஸ் கண்டுரி

## அச்சுக்கோர்ப்பு:

செவன் ஸ்டார் என்டர்பிரைஸஸ்,
சின்ச்வாட், புனே - 411019.

**காகிதம் :** 70 GSM Creamwove
**பதிப்பு ஆணை எண் :**
**பதிப்பாளர் :**

## தயாரிப்பு :

திருமதி. மித்தாலி ஷித்தப்
I/C முதன்மை அதிகாரி
திரு. இராஜேந்திர பாண்டுலுஸ்கர்
தயாரிப்பு அதிகாரி

## வெளியிடுவோர் :

திரு. ஹேமந்த் வி. பாபர்
I/C கட்டுப்பாட்டு அதிகாரி
மகாராஷ்டிர மாநிலப் பாடநூல்
தயாரிப்புக் கழகம்,
மும்பை - 400025.

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை **இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும் தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் **உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய்,

**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பகுதி 4 **A**

# குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு **51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;

b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;

c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;

d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;

e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;

f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;

g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;

h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;

i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;

j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;

k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# முகவுரை

என் அன்பு நண்பர்களே!

இரண்டாம் வகுப்புக்கு உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன். தமிழ் 'பாலபாரதி' இரண்டாம் வகுப்புக்கான இந்த பாடப்புத்தகத்தை உங்கள் கைகளில் வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒன்றாம் வகுப்பில் நீங்கள் தமிழ் எழுத்து வரிசையில் உள்ள எழுத்துகள் மற்றும் எழுத்துக் குறியீடுகள் இவற்றிலிருந்து சொற்களை உருவாக்க ஆரம்பித்தீர்கள். பாடங்களை படிப்பதன் மூலம் தமிழ் மொழியை நீங்கள் சரியான முறையில் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக்கொண்டீர்கள். இரண்டாம் வகுப்பில் நீங்கள் பல புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்ள இருக்கிறீர்கள்.

தமிழ் இரண்டாம் வகுப்பு பாடப்புத்தகத்தில் உள்ள படவர்ணனை, பாடல், கவிதை, பாடங்கள், கதைகள், படக்கதை, சொற்களஞ்சியம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட மொழிவிளையாட்டு, மொழிபுதிர் மற்றும் பல்வேறு மொழிச் செயல்களை நீங்கள் ஆர்வத்தோடு புரிந்துக் கொள்ள வேண்டும். பாடப்புத்தகத்தின் கருத்துக்கு ஏற்ப கொடுக்கப்பட்ட பல படங்களை உற்று நோக்கி நண்பர்கள் - தோழிகளோடு நிறைய விவாதங்களை நடத்த வேண்டும் மற்றும் அவர்களோடு கலந்துரையாட வேண்டும். ஒவ்வொரு படத்தையும் நுட்பமாக கவனத்தில் கொள்ள வேண்டும். பாடப் புத்தகத்தில் உங்களுக்கு விருப்பமான வகையில் மனம் கவரும், பேசும் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்படங்களின் மூலம் தமிழ் மொழியை நீங்கள் கற்பது மகிழ்ச்சியானதாகவும், ஆர்வமுள்ளதாகவும் இருக்கும்.

இப்பாடப்புத்தகத்தில் உள்ள பாடல்களை நீங்கள் அபிநயத்தோடும், தாளத்தோடும் பாடமுடியும். இந்தப் பாடல்களை தனியாகவும், குழுவாகவும் வழங்குவதில் உங்களுக்கு மகிழ்ச்சி கிட்டும்.

பாடப்புத்தகத்தில் உள்ள பல்வேறு பாடங்கள் மூலம் நீங்கள் பல புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். பாடங்களைக் கேட்கும் பொழுதும் அதை புரிந்து கொள்ளும் பொழுதும் நீங்கள் கண்டிப்பாக அதில் மூழ்கி விடுவீர்கள். பாடங்களில் உள்ள பல்வேறு விவரங்கள் உங்கள் அறிவை மேம்படுத்துவதோடு, உங்களுக்கு மகிழ்ச்சியையும் அளிக்கும்.

பாடல்கள் மற்றும் பாடங்களின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகள் மூலம் உங்கள் சிந்தனை ஆற்றல் தூண்டப்படுகின்றது. இந்த பயிற்சிகள் மூலம் உங்களுக்கு சிந்திக்க நிறைய வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சொல் வளத்தை அடிப்டையாகக் கொண்ட சொல்புதிர்கள், விளையாட்டுகள், செயல்கள் மூலம் பல புதிய சொற்களை நீங்கள் கற்றுக்கொள்ள முடியும். இந்த செயல்கள் மூலம் உங்கள் சொல் வளம் மேலும் அதிகரிக்கும்.

நீங்கள் அனைவரும் படைப்பாற்றல் மிக்கவர் ஆவீர்கள். இரண்டாம் வகுப்புக்கான இந்த பாடப்புத்தகத்தை படிப்பதில் நீங்கள் நிச்சயமாக மகிழ்ச்சியடைவீர்கள்.

என் அன்பு நண்பர்களே! உங்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகள்!

(அனுராதா ஓக்)
**இயக்குநர்**
மகாராஷ்டிரா மாநிலப்பாடநூலாக்கம்
மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே

புனே
நாள்: 19 ஏப்ரல் 2026,
இந்திய ஆண்டு: 2 வைசாக் 1948
அக்ஷய திருதிய

# தமிழ் (முதல் மொழி) வகுப்பு - 2 கற்றல் விளைவுகளின் பட்டியல்
## கற்றல் விளைவுகள்

| கற்றல் விளைவு எண் CG | கற்றல் விளைவுகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 9.1 | சில வகை பாடல்கள் மற்றும் கவிதைகள் கேட்பதில் ஆர்வம் காட்டுதல். அவர்களின் விருப்பத்திற்கான காரணத்தை விளக்குதல். | 1,2,18,21 31,38,43,57 |
| 9.1.2 | 2 முதல் 3 பத்திகள் உள்ள பாடல்கள் / ஒலிநய பாடல்கள் / கவிதைகள் - இவற்றை உரத்த குரலில் பாடுதல் மீண்டும் சொல்லுதல் | 1,18,21,31 38,43,57 |
| 9.2 | எளிய கவிதைகள், சந்தப் பாடல்களைத் தனது சொற்களில் உருவாக்குதல் | 20,32,38,39 |
| 9.3 | உரையாடும்போது தொடர்ந்து பேசுதல். பல பரிமாற்றங்களில் உரையாடலின் இழையைப் பராமரித்தல். | 4,14,28,29,33, 35,45,64,67,68 |
| 9.3.2 | கலந்துரையாடலில் பங்கேற்றல். வினா எழுப்புதல். வினாக்களுக்கு பதில் அளித்தல் | 28,30,35, 37,45,46 |
| 9.4.1 | நிபந்தனை அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் (எடுத்துக்காட்டு: மழை பெய்தால் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டாம், மாறாக களையெடுக்கவும். மழை பெய்யவில்லை எனில், செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சவும்) | 8,34,47, 51,60,63 |
| 9.4.2 | கணித வழிமுறைகளை தெளிவாக கூறுதல் (திசை இடம் குறி இயற்பியல் அளவுகள்) | 7,8,34 |
| 9.5 ◆ ◆ | தான் எழுத்தாளர் என்று கற்பனை செய்து எழுத்தாளரின் முடிவை மாற்றி கதையை எழுதுதல். ஒரு கதையை கூறும் போது கூடுதல் விவரங்களை தருதல். கேட்ட கதையில் படைப்பை விரும்புவதற்கும் வெறுப்பதற்கும் காரணங்களை கூறுதல் | 40,41, 46,48,49 |
| 9.6 | சிக்கலான கதைக்களம் மற்றும் பல கதாபாத்திரங்களுடன் சொந்தமாக கதையை உருவாக்குதல் | 13,25,32 40,49 |
| 9.7 | உரையில் அறிமுகம் இல்லாத சொற்களின் பொருளை புரிந்து கொள்ள குழந்தைகள் மழலையர் அகராதியை பயன்படுத்துதல். | 3,14,17,21, 26,41,43,53, 71,72,76,80 |
| 10.1 | சொற்களின் ஒலிக்குறிப்புகளை அறிந்து கொள்ளுதல். எழுத்துகளை சேர்ப்பதன் மூலம் சொல் உருவாகிறது சொற்களை எழுத்துகளாக அதாவது ஒலிக் குறிப்புகளாக பிரித்தல் | 3,6,15 |
| 10.2.2 | எளிய நிறுத்தற்குறிகளை சரியான முறையில் பயன்படுத்துதல் (முற்றுப்புள்ளி, கேள்விக்குறி) | 10,36,47 |
| 10.3.2 ◆ | பல எழுத்துச் சொற்களையும் ஒலிப்புச் சொற்களையும் தவறில்லாமல் வாசித்தல். ஒத்த ஒலி சொற்களை, எதுகை மோனை தயார் செய்தல். | 22,32,39, 42,53,79 |
| 10.4 | குறுகிய பத்திகளை சரியான உச்சரிப்பு, இடைநிறுத்தங்கள், ஒலியின் ஏற்ற இறக்கத்தோடு துல்லியமாக வாசித்தல். | 13,15,16,25 42,50,59,75 |
| 10.5 | காட்சி உள்ளடக்கத்தை விட அதிகமான உரையுடன் கூடிய புத்தகங்களை சொந்தமாகப் படிக்கத் தொடங்குதல். | 16,26,52, 53, 60,72, 73,76, 77 |

| | | |
|---|---|---|
| 10.5.2 | ஒரு கதையின் கதைக்களம். கதாபாத்திரங்கள், நிகழ்வுகளின் வரிசை ஆகியவற்றை கண்டறிதல். எழுத்தாளரின் பார்வையை கருத்தில் கொண்டு வாசித்தல். | 41,62,77 |
| 10.6 | சிறு கவிதையை வாசித்தல் மற்றும் கவிஞரின் கற்பனையை ஊகித்தல். | 18,21,43 |
| 10.7 | சிறு செய்திகள் மற்றும் அச்சிடப்பட்ட இலக்கியங்களை வாசித்தல். அவற்றின் உள்ளடக்கத்தை விளக்குதல். | 16,26,60, 63,75,77 |
| 10.8.1 ◆ | படங்களை அடிப்படையாகக் கொண்டு வருணனை அல்லது கதை எழுதுதல். படப் புத்தகத்திலிருந்து யூகித்து ஒரு கதையை எழுதுதல். | 9,12,48,49 |
| 10.8.2 | சிறிய வாக்கியங்களை சரியாக கேட்டு எழுதுதல். | 13,36,58,74 |
| 10.8.3 | நிகழ்வுகள் மற்றும் அனுபவங்களை பற்றி வருணனை செய்து சிறிய வாக்கியங்களில் எழுதுதல். | 20,77,78 |
| 10.8.4 | இரு நபர்களுக்கு இடையே ஆன உரையாடலை கற்பனை செய்து நான்கு முதல் ஐந்து வாக்கியங்கள் எழுதுதல். எடுத்துக்காட்டு: காய்கறி வியாபாரி - வாடிக்கையாளர், பேருந்து நடத்துனர் - பயணி | 44,67,77 |
| 10.8.5 | சமையல் காகித பொருட்கள் உருவாக்குதல் ஏதேனும் ஒரு விளையாட்டு விளையாடுவது போன்ற செயல் முறையை நான்கு முதல் ஐந்து வாக்கியங்கள் எழுதுதல். | 8,27,37,63 |
| 10.9.1 | புத்தகங்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டுதல். உண்மை கதைகள், கற்பனை கதைகள் ஆகிய இரண்டு புத்தகங்களையும் வாசித்தல். | 16,41,60, 61,62,77 |
| 10.9.2 | பள்ளியில் நூலகத்தில் புத்தகங்களைப் பராமரித்தல் மற்றும் ஒழுங்கு படுத்துதல். | 16,41,60,61 62,77 |

## ஆசிரியர் மற்றும் பெற்றோர்களுக்காக ....!

முதல் வகுப்பில் எழுத்துகளையும், சிறிய சொற்களையும் குழந்தைகள் கற்று உள்ளார்கள். இரண்டாம் வகுப்பில் அவர்களது சொல்வளத்தைப் பெருக்க பல பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பெற்றோரும், ஆசிரியரும் அந்தச் செயல்பாடுகளைச் செய்ய மாணவர்களுக்கு உதவ வேண்டும்.

- பல வகையான பாடல்கள், கவிதைகள், சந்தப்பாடல்கள் போன்றவற்றை கற்க வாய்ப்பளிக்க வேண்டும்.
- குழந்தைகள் படக்கதைகளை கூறவும், அதைப்பற்றி சிறு சொற்றொடர்கள் எழுதவும். ஆசிரியரும், பெற்றோரும் உற்சாகப் படுத்துதல் வேண்டும்.
- குழந்தைகள் தங்களுக்குத் தெரியாத விடயங்களை பெற்றோரிடம், ஆசிரியரிடம் கேள்வி கேட்டு அறிய அவர்களுக்கு வாய்ப்பு தர வேண்டும்.
- சொல்லகராதியைப் பயன்படுத்தக் கற்றுக் கொடுக்கவும்.
- அன்றாட நிகழ்வுகளை உற்றுநோக்கி அதை சிறிய சொற்றொடர்களாக, உரையாடல்களாக எழுத ஊக்கப்படுத்த வேண்டும்.
- மாணவர்களை சுற்றுப்புறத்தூய்மை, நீர் சேகரிப்பு ஆகிய வாழ்க்கைத் திறன்களை கடைப்பிடிக்க அறிவுறுத்த வேண்டும்.
- படகு செய்தல் போன்ற செயல் திட்டங்களை செய்யும்பொழுது அதன் செயல்முறையை மாணவர்கள் கூறிக்கொண்டே செய்கிறார்களா? என்பதை கவனிக்க வேண்டும்.



***குறிப்பு:*** *சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்களுக்கான கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டின்போது சைகை மொழி மற்றும் பிற துணை கற்பித்தல் முறைகளை பயன்படுத்த வேண்டும். சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்கள் தங்களால் இயன்ற வழிகளில் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.*

# பொருளடக்கம்

## அலகு - 1


1. நம் தேசியக்கொடி 01
2. புத்திசாலி தவளைகள் 09
3. அணிலும் முதலையும் 12
4. நமது நண்பர்கள் 14
5. ஷிவ்ராயின் இளமைப்பருவம் 16
6. சின்னக்குயில் 18


## அலகு - 2


7. உறவோடு வாழ்வோம் 21
8. குரங்குகளும் முழுநிலவும் 23
9. கொன்றை வேந்தன் 26
10. பூபதியின் நற்செயல் 28
11. வாகனங்கள் 31
12. இனிய உளவாக 35


## அலகு - 3


13. பள்ளிக்கூடம் 38
14. முன்னொரு காலத்தில் 40
15. குருவியும் கூடும் 43
16. நேர்மை 45
17. வனவிலங்குகளைக் காப்போம் 48
18. அல்லிக்குளம் 52


## அலகு - 4


19. ரோஜாவுக்கு நன்றி 56
20. பூசணிக்காய் வீடு 60
21. மும்பை சுற்றுலா 64
22. கோடை விடுமுறை 68
23. டிஜிட்டல் வகுப்பறை 72
24. கவிதாவின் பரிசு 76

அகராதி 80

# 1. நம் தேசியக்கொடி



✦ *பாடி மகிழ்வோம்!*

போற்றிடு! போற்றிடு!
தேசியக் கொடியை!

வணங்கிடு! வணங்கிடு!
தேசியக் கொடியை!

முன்னோர் தீரத்தால்
விளைந்த நற்கொடியை!

பின்னோர் பொறுப்பால்
பறந்திடும் பொற்கொடியை!

போற்றிடு! போற்றிடு!
தேசியக் கொடியை!

வணங்கிடு! வணங்கிடு!
தேசியக் கொடியை!



***மாணவர் குறிப்பு:*** பள்ளி வழிபாட்டு வேளைகளில் தேசியக் கொடியுடன் அபிநயத்தோடு இப்பாடலை பாடவும்.

***குறிப்பு:*** படத்தில் உள்ள தேசியக் கொடியின் வண்ணங்களுக்கும் அதிகாரப்பூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட வண்ணங்களுக்கும் இடையே வேறுபாடு இருந்தால் அதனை அச்சுப் பிழையாகக் கருதவும்.

## அ) பேசுவோம் வாருங்கள்.

1. நம் நாட்டின் பெயர் என்ன?
2. நம் நாட்டு தேசீய கீதம் எது?
3. பாடலில் வரும் ஒத்த ஒலி சொற்களை கூறுக.

## ஆ) படங்களின் பெயர்களை கேட்டு அறிந்து கூறுவேன்; வாசிப்பேன்.



ஜான்சி ராணி  காந்திஜி  திலகர்  பாரதியார்

## இ) செயல்: தேசியக்கொடியை வரைவேன்! வண்ணம் தீட்டுவேன்! அதைப்பற்றி கலந்துரையாடுவேன்.



**ஆசிரியர் குறிப்பு:** ‘தாயின் மணிக்கொடி’ போன்ற நாட்டுப்பற்று பாடல்களை கேட்க செய்யவும். அதை ரசித்து கேட்பதற்கான காரணத்தைக் கூற குழந்தைகளுக்கு வாய்ப்பு அளிக்கவும்.

# ஆத்திசூடி



நினைவு கூர்வோம்



## ✦ ஒலி நயத்துடன் ஆத்திசூடியை பாடுவோம்!



ஔவையார்

அறம் செய விரும்பு.
ஆறுவது சினம்.
இயல்வது கரவேல்.
ஈவது விலக்கேல்.
உடையது விளம்பேல்.
ஊக்கமது கைவிடேல்.
எண் எழுத்து இகழேல்.
ஏற்பது இகழ்ச்சி.
ஐயம் இட்டு உண்.
ஒப்புரவு ஒழுகு.
ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்.
அஃகம் சுருக்கேல்.

**செயல்: உயிரெழுத்துகளை வட்டமிடுக:**

[1] ஆடு [2] ஊசி [3] ஏணி [4] ஔவை
[5] அணில் [6] இஞ்சி [7] ஈசல் [8] ஐந்து [9] ஓடம்
[10] உடுக்கை [11] எறும்பு
[12] ஒட்டகம்

**ஆசிரியர் குறிப்பு:** மீண்டும் உயிரெழுத்துகளை குழந்தைகள் நினைவில் கொணர ஆசிரியர்கள் இது போன்ற பாடல்கள், செயல்கள், பயிற்சிகள் போன்றவற்றை தரவும்.

# எனது சிற்றூர்

நினைவு கூர்வோம்



✦ படங்களின் பெயர்களை எழுதுக.



**செயல்:** சொற்களின் முதல் எழுத்தை மெய் எழுத்து உயிர் எழுத்து என பிரித்து எழுதுக.
எடுத்து க்காட்டு: க=க்+அ.



# ஒன்று சேர்வோம் உலாவிட

நினைவு கூர்வோம்

✦ *மெய்யெழுத்துகளை நினைவு கூர்வோமே!*



தக்காளி தான் தளதள ...



தங்கத்தை பார் பளபள ...



பச்சை வெண்டை கொழகொழ ...



தஞ்சாவூர் பொம்மை அடஅட ...



பட்டாசு தான் படபட ...



வண்டி ஓடும் தடதட ...



தாத்தா சட்டை தொளதொள ...



சந்தைக்கு போ மளமள ...



பாப்பா சிரிப்பு கலகல ...



பம்பரம் விடு கரகர ...



காய்ந்த இலை சரசர ...



தேர்கள் ஓடும் கடகட ...



அல்வா தின்போம் சுடசுட ...



செவ்வாழையோ செவசெவ ...



கேழ்வரகு கூழோ வழுவழு ...



பள்ளி செல்வோம் நடநட ...



ஒற்றுமை என்றும் நிலவிட ...

ஒன்று சேர்வோம் உலாவிட ...

**செயல்:** மெய்யெழுத்துகளை வட்டமிட்டு காட்டவும்.

# வழியைக் கண்டுபிடிப்பேன்



வழியைக் கண்டுபிடி.




எழுத்துகளைச் சேர்த்து சொற்களை எழுதுக.






## ✦ விதிமுறைகளைப் புரிந்து பின்பற்றுவோம்!

### செயல்: காகிதத்தில் ஒரு படகு செய்வோம்.




1. ஒரு சதுரமான காகிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.
2. அதை நடுவில் இரண்டாக மடியுங்கள்.
3. மடித்த காகிதத்தை மீண்டும் பாதியாக மடியுங்கள்.
4. மேலுள்ள இதழை பாதி முன்புறமாக மடியுங்கள்.
5. மற்ற மூன்று இதழ்களை பின்புறம் மடியுங்கள்.
6. முக்கோண அடுக்குகளின் நடுவில் குழி செய்து அவற்றை ஒன்றாக அழுத்தவும்.
7. மடித்த இதழ்களை மேல் பகுதியில் இருபுறமும் பிடித்து திறக்கவும்.
8. படகு தயாராகி விட்டது. படகை குறிப்பேட்டில் ஒட்டவும்.

**ஆசிரியர் குறிப்பு:** மாணவர்களை குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் காகிதத்தை படிப்படியாக மடிப்பது எப்படி என்று கற்றுக்கொடுங்கள். மாணவர்கள் செய்த படகுகளில் அவர்களின் பெயர்களை எழுதச் சொல்லுங்கள். இதைப் போன்று முயல், வீடு, பூனை போன்ற வடிவங்களை செய்யும் வழிமுறைகளை கூறிக்கொண்டே செய்யுமாறு கூறவும். பின்னர் வழிமுறைகளை எழுதவும்.

# 2. புத்திசாலி தவளைகள்

## ✦ படத்தைப் பார்ப்பேன்; கதையைக் கூறுவேன்!



### வினாக்களுக்கு விடை அளிப்பேன்.

1. படத்தில் எத்தனை தவளைகள் உள்ளன?
2. தவளைகள் எதைப் பார்த்து பயந்தன?
3. தவளைகள் எங்கே ஒளிந்து கொண்டன?
4. இந்த கதை உனக்கு பிடித்துள்ளதா? ஏன் எனக் கூறுக.

**ஆசிரியர் குறிப்பு:** சிறிய கதைகளை குரலில் ஏற்ற இறக்கங்களோடு தகுந்த நிறுத்தங்களோடு கூற மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும். இத்துடன் மேலும் சில கதைகளை உருவாக்கக் கூறவும்.

அ) தகுந்த நிறுத்தற்குறிகள் இடுக. எடுத்துக்காட்டு:

பாலு என்னுடைய நண்பன் [ . ]     உன் பெயர் என்ன [ ? ]

1. இதென்ன தண்ணீர் தானியங்கள் யாருக்கு [ ]
2. இவை யாவும் பறவைகளுக்குத் தான் அம்மா [ ]
3. பறவைகள் என்ன சாப்பிடுகின்றன [ ]
4. அம்மா மகனை பாராட்டுகிறாள் [ ]

ஆ) விடுபட்ட சொற்களை கட்டங்களில் எழுதுவேன்.






# பட அகராதி

✦ படங்களைப் பார்ப்பேன். பெயர்களை அறிவேன்.




நாணயம்



ஒலிபெருக்கி



பேருந்து



திறன்பேசி



எழுதுகோல்



தொலைகாட்சி



கரும்பலகை




அழிப்பான்



கரிக்கோல்




செய்தித்தாள்



தலைக்கவசம்



மெழுகுவர்த்தி



மிதிவண்டி



மீன்தொட்டி



உண்டியல்



படகு



கைக்கடிகாரம்



கணினி



குப்பி



உடுப்பு

# 3. அணிலும் முதலையும்



✦ படத்தைப் பார்ப்பேன். வரிசைப்படுத்துவேன். கதையைக் கூறுவேன்!













**ஆசிரியர் குறிப்பு:** மாணவர்கள் கதையை முறையாக தொடங்க பயிற்சி தரவும். எடுத்துக்காட்டு: ஓர் ஊரில் ........

## அ] பேசுவோம் வாருங்கள்.

1. அணிலின் நண்பன் யார்?
2. அணில் எவ்வாறு ஆற்றை கடந்தது?
3. ஆற்றங்கரையில் என்ன மரம் இருந்தது?
4. நீரில் வாழும் விலங்குகள் யாவை?
5. உனக்குப் பிடித்த பழங்களின் பெயர்களை கூறுக.

## ஆ] அணிலும் - முதலையும் கதையை எழுதுவேன்.

1. ........................................................................
2. ........................................................................
3. ........................................................................
4. ........................................................................
5. ........................................................................
6. ........................................................................

## இ] சொல் கோபுரம் அமைப்போம்.

- பூசணி, பூ, பூக்கள், பூனை

- கதை, குழந்தை, தந்தை, தை






# 4. நமது நண்பர்கள்



✦ படங்களைப் பார்ப்பேன். பேசுவேன்!



தச்சர்



மருத்துவர்



ஆசிரியர்



நெசவாளர்



தையற்காரர்



ஓவியர்



காவலர்



வழக்கறிஞர்



உழவர்

**ஆசிரியர் குறிப்பு:** நம்மைச் சுற்றி உள்ள மனிதர்கள் என்னென்ன தொழில் செய்கிறார்கள் என்பது பற்றி வகுப்பறையில் உரையாடவும். நீ எதிர்காலத்தில் என்னவாக விரும்புகிறாய்? என பேச மாணவர்களை உற்சாகப்படுத்தவும்.

## அ) பேசுவோம் வாருங்கள்.

1. மர வேலை செய்பவர் யார்?
2. ஓவியர் என்ன செய்வார்?
3. உன் தந்தை என்ன வேலை செய்கிறார்?
4. உழவுத்தொழில் செய்பவர்களைப் பார்த்திருக்கிறாயா? அவர்களைப் பற்றிக் கூறுக.

## ஆ) அகரவரிசைப் படுத்துவேன்.

சந்தை, சீப்பு, சூரியன், சாட்டை, சிங்கம், சேவல், சுண்டல், செம்பு, சொடுக்கு, சைகை, சோளம், சௌம்யா

## இ) சொல்லில் மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடிப்பேன்.

எடுத்துக் காட்டு:

பலகை → பல, கை

பூமாலை



எழுதுகோல்





## வாசிப்புப் பகுதி



என் பெயர் செழியன். நான் இரண்டாம் வகுப்பில் பயில்கிறேன். எனக்குப் படம் வரைவது மிகவும் பிடிக்கும். என் மாமா ஓர் ஓவியர். அவர் அழகாக படம் வரைவார். அவர் படம் வரையும் போது அருகில் இருந்து பார்ப்பேன். அவருக்கு உதவிகள் செய்வேன். நான் வளர்ந்த பின் அவரைப்போல ஓவியராக விரும்புகிறேன்.

# 5. ஷிவ்ராயின் இளமைப்பருவம்

✦ *வாசித்து மகிழ்வோம்!*



சத்ரபதி சிவாஜி மஹாராஜாவின் பெற்றோர் ஜீஜாபாயும், ஷஹாஜி போஸ்லேவும் ஆவர். அவர்கள் சத்ரபதி சிவாஜியை இளம் வயதில் 'ஷிவ்ராய்' என்றே அன்போடு அழைப்பர். ஜீஜாபாய், ஷிவ்ராய்க்கு புராணங்களில் உள்ள மாவீரர்களின் கதைகளைப் பற்றி கூறுவார். ஷிவ்ராய் அக்கதைகளை ஆர்வத்தோடு கேட்பார். பின்னாளில் தானும் அவர்களைப் போலவே மாவீரர் ஆக வேண்டும் என உறுதி பூண்டார்.

**ஆசிரியர் குறிப்பு:** வடமொழி எழுத்துகள் உள்ள சொற்களை தவறின்றி வாசிக்க, எழுத பயிற்சி அளிக்கவும். நூலகம் சென்று வரலாற்று கதைகளை வாசிக்க பயிற்சி அளிக்கவும்.

அ) பேசுவோம் வாருங்கள்.

1. சத்ரபதி சிவாஜி மஹாராஜாவின் சிலையை நீ பார்த்திருக்கிறாயா?
2. சத்ரபதி சிவாஜி மஹாராஜாவின் பெற்றோர் யாவர்?
3. சத்ரபதி சிவாஜி மஹாராஜாவை இளம் வயதில் எவ்வாறு அழைப்பர்?
4. ஜீஜாபாய் யாருடைய கதைகளை ஷிவ்ராய்க்குக் கூறினார்?

ஆ) படங்களைப் பார்ப்பேன்: பெயர்களை வாசிப்பேன்.

ரோஜா   பாதுஷா

ஸ்மார்ட் போன்   ஜாடி

இ) பின்வரும் சொற்களில் வடமொழி எழுத்தை வட்டமிடுக.

ஜாடி, கூஜா, ஜூன், மேஜை, ஜன்னல், காஷ்மீர், ஆகஸ்ட்
ஜிலேபி, வேஷ்டி, புஷ்பா, சர்க்கஸ், தாஜ்மஹால்

ஈ) ஆங்கில மாதங்களின் பெயர்களை நாட்காட்டியிலிருந்து பார்த்து எழுதுவேன்.

................. ................. ................. .................
................. ................. ................. .................
................. ................. ................. .................

# 6. சின்னக்குயில்



✦ பாடி மகிழ்வோம்!

சின்னச் சின்னக் குயில்
சிங்காரக் குயில்!
கூக்கூ .... கூக்கூ ....

முத்து முத்துக் குயில்
முகம் காட்டா குயில்!
கூக்கூ .... கூக்கூ ....

பட்டு பட்டுக் குயில்
பாடித்திரியும் குயில்!
கூக்கூ .... கூக்கூ ....

இனிய இனியக் குயில்
இன்னிசை பாடும் குயி
கூக்கூ .... கூக்கூ ....

கருமை உந்தன் அழகு
காண எனக்கும் ஆசை
கூக்கூ .... கூக்கூ ....



**ஆசிரியர் குறிப்பு:** மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒரு குழு பாடலைப் பாடும்பொழுது மற்றொரு குழு குயில் போன்று ஓசை எழுப்பக்கூறவும்.

## அ] பேசுவோம் வாருங்கள்.

1. குயிலை நீ பார்த்திருக்கிறாயா?
2. குயிலின் குரலை நீ கேட்டு இருக்கிறாயா?
3. குயிலின் நிறம் என்ன?
4. குயில் உணவு என்ன?
5. குயில் எங்கே வாழும்?

## ஆ] இவை என்ன செய்யும் என எழுதுக.

[ஆடும், பாடும், கரையும், கூவும்]

குயில் .......... - மயில் ..........

காகம் .......... - சேவல் ..........

## இ] அடுக்குத் தொடர் சொற்களைக் கோடிட்டு காட்டுக.

1.  மெல்ல மெல்ல நகர்ந்தது.

2. தாவித் தாவி சென்றது. 

3.  குதித்து குதித்துச் சென்றது.

4. கொத்துக் கொத்தாக காய்த்திருந்தன. 

## ஈ] பழமொழிகளை வாசிப்பேன்; விளக்கம் கேட்டு அறிவேன்.

1. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
2. காக்கைக்கு தன்குஞ்சு பொன்குஞ்சு.
3. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.

உ ) உன் வீட்டில் ஏதேனும் ஓர் இடத்தில் பறவை கூடு கட்டி இருந்தால் நீ என்ன செய்வாய்?

................................................................................

................................................................................

................................................................................

................................................................................

✦ நானே பாடல் எழுதுவேன்.

எடுத்துக்காட்டு:






**ஆசிரியர் குறிப்பு:** அடுக்குத்தொடர் சொற்களைக் கொண்டு புதிய சொற்றொடர்கள் எளிய பாடல்கள் எழுத மாணவர்களுக்கு வாய்ப்பு தரவேண்டும்.

# 7. உறவோடு வாழ்வோம்

அலகு 2



## ✦ பாடி மகிழ்வோம்!



மாமா வந்தார் மகிழ்வோடே
மாம்பழம் தந்தார் கனிவோடு!

அத்தை வந்தார் அன்போடே
ஆடை தந்தார் ஆசையோடு!





சித்தப்பா வந்தார் ஜீப்பிலே
சிறுதேர் தந்தார் சிரிப்போடு!

சித்தி வந்தார் சிறப்போடு
சித்திரம் தந்தார் நகைப்போடு!





பெரியப்பா வந்தார் பரிசோடே
பேருந்து தந்தார் பரிவோடு!

பெரியம்மா வந்தார் பொறுப்போடே
பொம்மை தந்தார் மகிழ்வோடு!



கூடி மகிழ்ந்திடுவோம்!
ஒன்றாய் உறவாய் வாழ்ந்திடுவோம்!

**ஆசிரியர் குறிப்பு:** மாணவர்களை எளிய பாடல்கள், கவிதைகள், கேட்க வைத்தல். அப்பாடல்கள் அவர்களுக்கு ஏன் விருப்பமாக உள்ளன என்ற காரணத்தை கேட்டறிதல்.

## அ) பேசுவோம் வாருங்கள்.

1. உனது உறவினர்கள் யார் யார்?
2. உனது பெற்றோர் பெயர் என்ன?
3. இந்தப்பாடலில் வரும் ஒத்த ஒலி சொற்களை எழுதுக.
4. இந்தப்பாடலில் மாமா என்ன கொண்டு வந்தார்?
5. ஜீப்பில் வந்தது யார்?
6. பொம்மை கொண்டு வந்தது யார்?

## ஆ) இணைப்போம் வாருங்கள்.

| | | |
|---|---|---|
| தாத்தா | - | மாமா |
| பெரியம்மா | - | சித்தி |
| அண்ணன் | - | பாட்டி |
| அத்தை | - | பெரியப்பா |
| சித்தப்பா | - | அப்பா |
| அம்மா | - | அண்ணி |

## இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

(மாமா, சித்தி, அத்தை, சித்தப்பா, பெரியம்மா, கூடி, பெரியப்பா)

1. உறவோடு ........... வாழ்வோம்.
2. அம்மாவின் தங்கை ................
3. அம்மாவின் அக்கா ................
4. அம்மாவின் சகோதரர் ...............
5. அப்பாவின் தம்பி ..................
6. அப்பாவின் அண்ணன் ..................
7. அப்பாவின் சகோதரி ......................

# 8. குரங்குகளும் முழுநிலவும்

## ✦ கதைக் கூறி மகிழ்வோம்!






## அ] பேசுவோம் வாருங்கள்.

1. முழுநிலவை பார்த்திருக்கிறாயா?
2. முழுநிலவு நாளை என்ன என்று சொல்வோம்?

## ஆ] விடை எழுதுக.

1. குரங்குகள் குளத்தில் எதைப் பார்த்தன?

   ..........................................................................

2. படத்தில் எத்தனை குரங்குகள் உள்ளன?

   ..........................................................................

இ] வானத்தில் நீ காண்பனவற்றை வரைந்து காட்டவும்.

உ] குறிப்புகளைப் பயன்படுத்தி கதையை நிறைவு செய்வேன்.

ஒரு காடு - ஒரு நரி - நரிக்கு பசி - உணவுதேடி அலைந்தது - திராட்சைக் குலையை பார்த்ததும் - முயற்சி செய்தல் - வெற்றி பெறுதல்.

...............................................................................

...............................................................................



## வாசிப்புப் பகுதி



மாதவன் தன் குடும்பத்தினரோடு ஞாயிற்றுக் கிழமையன்று ஏரிக்கரைக்குச் சிற்றுலா சென்றான். வழி நெடுகிலும் உயரமான மரங்கள் இருந்தன.தரையெங்கும் பசுமையான புற்களோடு வண்ண பூக்களும் மலர்ந்து இருந்தன. வண்ணத்துப் பூச்சிகள் அங்கும் இங்கும் பறந்தன.வயல்வெளிகள் பச்சை பசேல் என்று இருந்தன. மாதவன் குடும்பத்தினர் மாலை வரை ஏரிக்கரையில் விளையாடியும், உண்டும், ஓய்வெடுத்தும் மகிழ்ந்தனர்.

1. மாதவன் ஞாயிற்றுக்கிழமை குடும்பத்தினருடன் எங்கு சென்றான்?
2. வயல்வெளிகள் எவ்வாறு இருந்தன?

**ஆசிரியர் குறிப்பு:** படக்கதைகள் பலவற்றை காண்பித்து மாணவர்களை கதைகள் கூறச்சொல்லவும். பின்னர் கதையை எழுத ஊக்கப்படுத்தவும்.



# 9. கொன்றை வேந்தன்

- அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
- ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
- எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
- ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு.
- குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
- சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்.
- தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
- தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை.
- திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
- நுண்ணிய கருமம் எண்ணித் துணிக.
- பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்.
- முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
- மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

**ஆசிரியர் குறிப்பு:** செய்யுள் வரிகளை வாசிக்கவும் சொல்லக் கேட்டு எழுதவும் பயிற்சி தரவும்.

**ஔவையார்**

# தமிழர் விளையாட்டுகள்



## ✦ விளையாட்டுகளின் பெயர்களை அறிவேன்!

பாரம்பரிய விளையாட்டுகள் இரு வகைப்படும். அவை உள்ளரங்க மற்றும் வெளி அரங்க விளையாட்டுகள் ஆகும். இவை நமது அறிவாற்றலை, நினைவாற்றலை மேம்படுத்துகின்றன. உடலை புத்துணர்ச்சியுடன் ஆரோக்கியமாக வைத்திருக்கவும் உதவுகின்றன.



**ஆசிரியர் குறிப்பு:** தமிழரின் பாரம்பரிய விளையாட்டுகளை பற்றி மாணவர்களுக்கு கூறவும். அவ்விளையாட்டுகளை விளையாடும் முறைகள் பற்றி பெற்றோரிடம் கேட்டு குறிப்பேட்டில் எழுதவும். பின்னர் நண்பர்களுக்கு வகுப்பறையில் விவரிக்கக் கூறவும்.

# 10. பூபதியின் நற்செயல்

✦ வாசிப்போம் மகிழ்வோம்!

**அம்மா:** பூபதி .. நேரமாகிவிட்டது.. பள்ளிக்குப் புறப்படு

**பூபதி:** இதோ வருகிறேன் அம்மா!

[கிண்ணங்களில் நீர், மற்றும் தானியங்களோடு பூபதி வருதல்]

**அம்மா:** இதென்ன பூபதி! தண்ணீர், தானியங்கள்.. யாருக்கு?

**பூபதி:** பறவைகளுக்கு தான் அம்மா. வைத்து விட்டு ஓடி வருகிறேன்.



**அம்மா:** இவற்றை வைக்க வேண்டும் என்று யார் சொன்னார்கள்?

**பூபதி:** பறவைகளுக்கு நீர் தேவை அல்லவா! அதனால் தான் நீரும், உணவும் வைக்கப் போகிறேன். அவை இவற்றை உண்டு, பருகி மகிழும் அல்லவா?

**அம்மா:** நல்ல செயல் தான் கண்ணே! உன் நண்பர்களையும் இவ்வாறே செய்யச் சொல்!

**பூபதி:** சரி, அம்மா! என் நண்பர்களுக்கும் சொல்வேன். அதோ பார், அம்மா! எத்தனை பறவைகள் சாப்பிடுகின்றன!

**அம்மா:** ஆம், கண்ணே! பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருக்குது! பறவைகளுக்கு மட்டுமல்ல, மற்ற விலங்குகளுக்கும் நம்மால் முடிந்த அளவு உணவும், நீரும் அளிக்க வேண்டும்.



## அ) பேசுவோம் வாருங்கள்.

1. பூபதி பறவைகளுக்கு என்ன கொடுத்தான்?
2. பூபதியின் செயலை பாராட்டியது யார்?
3. உனக்கு தெரிந்த பறவைகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
4. பறவைகள், விலங்குகளுக்கு உன்னால் என்ன உதவிகள் செய்ய முடியும்?

✦ படத்தைப் பார்ப்பேன், பதாகைகளை வாசிப்பேன். உரையாடுவேன்!

✦ மாநகராட்சி தமிழ்ப் பள்ளியின் 'மாணவர் பசுமை படை' நடத்தும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அணிவகுப்பை கவனியுங்கள்.




**செயல் :** ஆசிரியரின் உதவியோடு நீரின் முக்கியத்துவம் - சேமிப்பு பற்றிய முழக்க வாக்கிய கத்தரிப்புகளைச் சேகரிக்கவும். பின்னர் பதாகைகள் தயாரிக்கவும். நீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வு அணிவகுப்பு நடத்தவும்.

நீரின்றி அமையாது உலகு



நீரை சேமிப்போம்

துளித்துளி மழைத்துளி! அதுவே நம் உயிர்த்துளி!

# 11. வாகனங்கள்



பாடி மகிழ்வோம்!



ரோட்டுல ஓடும் காரு
தினமும் கூடுது பாரு!

வாகனம் விடும் புகையே
நமக்கு தருகுது நோயே!



காட்டில் குறையுது மரங்கள்
நாட்டில் பொய்க்குது மழையும்!

பூமியில் கூடுது வெப்பநிலை
அதனால் மாறுது காலநிலை!



மனிதன் செய்கின்ற தவறால்
இயற்கை அழிவது அவலம்!

இயற்கையின் அழிவை மாற்றிடுவோம்!
இன்பமாய் அனைவரும் வாழ்ந்திடுவோம்!

**ஆசிரியர் குறிப்பு:** ஊர்தி என்ற சொல்லை அறிமுகப்படுத்தவும். பல்வேறு வாகனங்களை பற்றி கலந்துரையாட மாணவர்களை உற்சாகப் படுத்தவும். வாகனங்கள் பற்றி சிறு கதைகள் எழுத உற்சாகப் படுத்தவும்.

## அ] பேசுவோம் வாருங்கள்.

1. நீ தினமும் பள்ளிக்கு யாருடன் செல்கிறாய்?
   எந்த வாகனத்தில் செல்கிறாய்?
2. தொடர் வண்டியில் உன் கிராமத்திற்கு சென்று இருக்கிறாயா? அதைப்பற்றிய அனுபவத்தைக் கூறு.
3. வாகனப் புகையால் கால நிலையில் என்ன மாற்றம் ஏற்படுகிறது?

## ஆ] கவிதை வாசிப்பேன்

பஸ் வருகுது பாம்! பாம்!
ஸ்கூட்டர் வருகுது டர்ர்ர்! டர்ர்ர்!
ஆட்டோ வருகுது டுக்! டுக்!
சைக்கிள் வருகுது ட்ரிங்! ட்ரிங்!

## கவிதை எழுதுவேன்

........................................................
........................................................
........................................................
........................................................

## இ] பல வகை வாகனங்களின் படங்களைத் திரட்டி குறிப்பேட்டில் ஒட்டுக. ஆசிரியர் சொல்ல கேட்டு வாக்கியங்களை எழுதுக.

## ஈ] குறிப்புகளைப் பயன்படுத்தி கதையை எழுதுக.

[ஒரு மரப்பாலம் - இரு ஆடுகள் - எதிரெதிர் திசையில் வருதல் - ஆடுகள் உரையாடுதல்- முடிவு]

........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................
........................................................................................

ஈ) படத்தை பார்த்து வாகனங்களின் பெயரை அறிக.
எந்த வாகனத்தினால் சுற்றுப்புற மாசு ஏற்படுவதில்லை
என்பதை குறியிட்டு காட்டுக. ✓









உ) வாகனங்களைப் பற்றி நண்பர்களோடு உரையாடுவேன்.

குழந்தைகளின் விளையாட்டு



ஊ) உனக்கு பிடித்த வாகனத்தை ஓவியப் புத்தகத்தில்
வரைந்து வண்ணமிடுக.

# சாலை விதிகள்

## விதிமுறைகளைக் கடைபிடிப்போம்!




1. நடைபாதையின் மீது நடக்க வேண்டும்.
2. ஜிப்ரா கிராஸிங் வழியாக சாலையைக் கடக்க வேண்டும்.
3. சிவப்பு விளக்கு எரிந்தால் நிற்க வேண்டும்.
4. பச்சை விளக்கு எரியும் பொழுது சாலையைக் கடக்க வேண்டும்.



# 12. இனிய உளவாக

## உரையாடி மகிழ்வோம்!

[மேசையில் வாழைக்காய்களும், வாழைப்பழங்களும் இருக்கின்றன]

**ஆசிரியை:** குழந்தைகளே! ஒவ்வொருவராக இங்கே வாருங்கள்!
உங்களுக்கு பிடித்தவற்றை எடுத்து சாப்பிடுங்கள்.




**ஜோசப்:** எனக்கு வாழைப்பழம் பிடிக்கும்!

**வேணி:** எனக்கும் வாழைப்பழம் தான் பிடிக்கும்!

**அமுதா:** நான் வாழைப்பழம் சாப்பிடுவேன்!

**முகமது:** நான் வாழைப்பழமும் சாப்பிடுவேன்!
மாம்பழங்களும் சாப்பிடுவேன்.

**ஆசிரியை:** நீங்கள் யாருமே வாழைக்காய்களை
சாப்பிடவில்லையே!

**முகமது:** பழங்கள் தான் இனிப்பாக இருக்கும் அம்மா.

**வேணி:** வாழைக்காய்களை அப்படியே சாப்பிட முடியாதே, அம்மா.

**ஆசிரியை:** இதுதான் திருக்குறளில் ‘கனியிருப்பக் காய் கவர்ந்தற்று’ எனக் கூறப்பட்டுள்ளது.

**ஜோசப்:** அப்படி என்றால் ..... ?

**ஆசிரியை:** அதாவது, உண்பதற்கு நல்ல பழங்கள் இருக்கும் போது, காய்களை யாரும் விரும்பி உண்ண மாட்டார்கள். அதைப்போல, இனிய சொற்கள் இருக்கும் போது நாம் பிறர் வருந்த கடுமையானச் சொற்களை பேசக் கூடாது. இதைத் தான் திருவள்ளுவர் திருக்குறளில்

> ‘இனிய உளவாக இன்னாத கூறல்
> கனியிருப்பக் காய் கவர்ந்தற்று’

என்று கூறி இருக்கின்றார்.

**அனைவரும்:** இனி பிறர் வருந்த கடுமையானச் சொற்களைப் பேச மாட்டோம் அம்மா. இனிமையான சொற்களையே பேசுவோம்.

## அ] பேசுவோம் வாருங்கள்.

1. அனைவரும் பழங்களை விரும்புவது ஏன்?
2. உனக்கு பிடித்த பழம் எது?
3. திருவள்ளுவர் எழுதிய நூல் யாது?

## ஆ] பின்வரும் திருக்குறளை வரியொற்றி எழுதுக.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று

.............................................................

.............................................................

**ஆசிரியர் குறிப்பு:** சொல்லக் கேட்டு எழுத பயிற்சி தரவும்.

## ✦ வழிகாட்டுதலைப் புரிந்து செயல் படுவோம்!

## ✦ *வாருங்கள் பழக்கலவை தயாரித்து சாப்பிடுவோம்.*






இப்பொருட்களை பயன்படுத்தி பழக்கலவை தயாரிக்க குறிப்புகள் தரவும்.

**ஆசிரியர் குறிப்பு:** இதைப் போன்ற கலந்துரையாடலில் பங்கேற்க வாய்ப்பு அளிக்கவும். மாணவர்களுக்கு வகுப்பறையில் நடத்திக் காட்டவும்.

# 13. பள்ளிக்கூடம்

அலகு 3



## ✦ பாடி மகிழ்வோம்!



தந்தினம் தானினம்..
தந்தினம் தானினம்..
தந்தினம் தானினம் தந்தானே!
தந்தினம் தானினம் தந்தானே! .. || தந்தினம் ||

பள்ளிக் கூடம் படிப்பதற்கு
பாப்பா நீயும் வரணும் - சின்னப்
பாப்பா நீயும் வரணும் - செல்லப்
பாப்பா நீயும் வரணும்..
மகிழ்ச்சியோடு ஆடி ஓடி
பள்ளிக்கூடம் வரணும்.. || தந்தினம் ||



படித்து முடித்து பட்டம் வாங்கி
பதவியையும் பெறணும் - நீயும்
பதவியையும் பெறணும் உயர்
நாடு உயர நாளும் உழைத்து
பேரும் புகழும் பெறணும் .. || தந்தினம் ||



பெற்றெடுத்த பெற்றோரைப்
பேணிக் காக்க வேணும் - நீயும்
பாதுகாக்க வேணும் - அவரை
மதித்து வணங்க வேணும் ..
வீட்டோடும் ஊரோடும் நீயும்
கூடி வாழ வேணும் || தந்தினம் ||

**ஆசிரியர் குறிப்பு:** இது போன்ற பிற சந்தநயப் பாடல்களை தனியாகவோ குழுவாகவோ வகுப்பறையில் உரத்த குரலில் பாடச் சொல்லவும்.

## அ) பேசுவோம் வாருங்கள்.

1. உன் பள்ளிக்கூடத்தைப் பற்றி கூறுக.
2. பள்ளிக்கூடத்திற்கு எவ்வாறு வரவேண்டும்?
3. யாரோடு கூடி வாழவேண்டும்?
4. இந்தப் பாடல் உனக்கு பிடித்திருக்கிறதா? ஏன் பிடித்தது?
5. இந்தப் பாடல் மூலம் உனக்கு கிடைத்த நீதி யாது?

## ஆ) எடுத்துக்காட்டை வாசித்து அது போன்று மாற்றி எழுதுக.



| | |
|---|---|
| நான் படிப்பேன் | நாங்கள் படிப்போம் |
| நான் எழுதுவேன் | ................................ |
| நான் பாடுவேன் | ................................ |
| நான் ஓடுவேன் | ................................ |



## இ) பாடலில் உள்ள ஒத்த ஒலியுடைய சொற்களை எழுதுக.



### வாசிப்புப் பகுதி



என் பெயர் சீதா. நான் மாநகராட்சி பள்ளியில் இரண்டாம் வகுப்பில் பயில்கிறேன். எங்கள் பள்ளி பெரிய பள்ளி. எங்கள் பள்ளியில் தோட்டமும் பெரிய விளையாட்டு திடலும் உள்ளது. எங்கள் பள்ளியைச் சுற்றி நிறைய மரங்கள் உள்ளன. நான் என் பள்ளியை மிகவும் நேசிக்கிறேன்.

1. சீதா எந்த பள்ளியில் பயில்கிறாள்?
2. சீதா எத்தனையாவது வகுப்பில் பயில்கிறாள்?
3. பள்ளியில் என்னென்ன உள்ளன?



# 14. முன்னொரு காலத்தில் ..

## ✦ வாசித்து மகிழ்வோம்!



முன்னொரு காலத்தில்
ஓர் அரசர் இருந்தார். அந்த
அரசருக்கு ஒரு குமாரன்
இருந்தான். அரசகுமாரன்
மீன் பிடிக்க போனான்.
ஏழு மீன்களைப் பிடித்து
வந்தான். ஏழு மீன்களையும்
காய வைத்தான். அதில்
ஒரு மீன் மட்டும் காயவில்லை.



**அரசகுமாரன்:** மீனே! மீனே!
நீ ஏன் காயவில்லை?

**மீன்:** வைக்கோல் கட்டு
என்னை மறைத்து விட்டது.

**அரசகுமாரன்:** வைக்கோல்
கட்டே! வைக்கோல் கட்டே!
நீ ஏன் மறைத்தாய்?



**வைக்கோல் கட்டு:** மாடு
என்னை சாப்பிடவில்லை.

**அரசகுமாரன்:** மாடே! மாடே!
நீ ஏன் சாப்பிடவில்லை?

**மாடு:** மாட்டுக்காரர் என்னை
அவிழ்த்து விடவில்லை.

**அரசகுமாரன்:** மாட்டுக்காரரே! மாட்டுக்காரரே! ஏன் மாட்டை அவிழ்த்து விடவில்லை?



**மாட்டுக்காரர்:** பாட்டி எனக்கு கூழ் ஊற்றவில்லை.

**அரசகுமாரன்:** பாட்டி! பாட்டி! நீ ஏன் கூழ் ஊற்றவில்லை?



**பாட்டி:** பெயரன் அழுதான்.

**அரசகுமாரன்:** குழந்தாய்! குழந்தாய்! நீ ஏன் அழுதாய்?



**குழந்தை:** என்னை எறும்பு கடித்தது.

**அரசகுமாரன்:** எறும்பே! எறும்பே! குழந்தையை ஏன் கடித்தாய்?





**எறும்பு:** என் தங்கமான புற்றில் கை வைத்தால், நான் கடிக்க மாட்டேனோ?

**ஆசிரியர் குறிப்பு:** மாணவர்களை இது போன்ற கதைகளை கேட்கவும், திரும்ப கூறவும், உரையாடலின் போது தொடர்ந்து பேசவும் உற்சாகப்படுத்துதல்.

## அ) பேசுவோம் வாருங்கள்.

1. அரசரின் மகன் எத்தனை மீன்களைப் பிடித்தான்?
2. மாடு எதை சாப்பிடவில்லை?
3. குழந்தை ஏன் அழுதது?
4. நீரில் வாழும் விலங்குகள் சிலவற்றைக் கூறுக.
5. இந்த கதை உனக்குப் பிடித்துள்ளதா?
   ஏன் பிடித்தது எனக் காரணம் கூறுக.

## ஆ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒரு .......... [மீன்/தவளை] மட்டும் காயவில்லை.
2. குழந்தையை .......... [நண்டு/எறும்பு] கடித்தது.
3. என் .................. [புற்றில்/சோலையில்]
   விரலை விட்டால் கடிக்க மாட்டேனோ?



### வாசிப்புப் பகுதி



மயில் ஓர் அழகான பெரிய பறவை. மயில் வயல் வெளிகளிலும், காடுகளிலும் வசிக்கும்.மயில் தானியங்கள் மற்றும் சிறு புழு பூச்சிகளை உணவாக உண்ணும். ஆண் மயிலுக்கு அழகான நீண்ட தோகை உண்டு. மயில் பொதுவாக நீலப்பச்சை நிறத்தில் காணப்படும். மயிலுக்கு நீண்ட கழுத்து உண்டு. மயில் எழுப்பும் ஒலி அகவல் எனப்படும். மழை மேகத்தை பார்த்தவுடன் மயில் அழகாகத் தோகை விரித்து நடனமாடும். மயில் நமது தேசியப் பறவை ஆகும். அதனை பாதுகாப்பது நமது கடமையாகும்.

1. மயில் எங்கு வசிக்கும்?
2. மயிலின் உணவு என்ன?
3. மழை மேகத்தைப் பார்த்தவுடன் மயில் என்ன செய்யும்?

# 15. குருவியும் கூடும்



✦ பாடி மகிழ்வோம்!



அடர்ந்த தோப்பின் நடுவினிலே
பச்சைமரம் ஒன்றின் கிளையினிலே
தூக்கணாங் குருவி கூடுகட்டி
மகிழ்வாய் வாழ்ந்து வந்ததுவே!

அடை மழையும் வந்ததாலே
எட்டி பார்த்த குருவியுமே
மழையில் நனைந்த குரங்கொன்றை
கண்டு இரக்கம் கொண்டதுவே

சின்னப் பறவை என் போலவே
நீங்களும் வீடு கட்டி இருந்தால்
பெய்யும் மழையில் நனையாமல்
நலமாய் வாழ்ந்து இருந்திடலாமே!

அறிவுரை கேட்ட குரங்குமே
அடுத்த மழைக்குள் வீடொன்றை
கட்டியே சுகமாய் வாழ்ந்திடுவேன்
என்றே நன்றி கூறியதே.

**ஆசிரியர் குறிப்பு:** கீழ் படிதலின் மேன்மையை குறித்து மேலும் பல கதைகளைக் கூறுக. பல பாடல்களை படித்து கவிஞரின் கற்பனையை புரிந்து கொள்ள மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல். சந்த நயம் உள்ள சொற்களைப் பயன்படுத்தி எளிய கவிதைகள் எழுதுதல்.

அ] கேள்விகளை வாசித்து விடை எழுதுக.

1. கூடு கட்டியது யார்?

2. அறிவுரை கேட்ட குரங்கு என்ன கூறியது?

ஆ] பேசுவோம் வாருங்கள்.

1. குருவிகளை எங்கு எங்கு காணலாம்?

2. நீ குருவிக்கூட்டை பார்த்து இருக்கிறாயா? எங்கே?

3. குருவி என்னென்ன சாப்பிடும்?

4. மழையில் நனையாமல் இருக்க நீ என்னென்ன செய்வாய்?

5. குருவி குரங்கிடம் என்ன சொன்னது?

இ] கட்டங்களை நிரப்புக. சொற்களை எழுதுக.

மேலிருந்து கீழ்

1. மெதுவாக செல்லும்
2. பாடும் பறவை

இடமிருந்து வலம்

1. கரிய மிருகம்
2. மரத்திற்கு மரம் தாவும்




ஈ] உரையாடலை நிறைவு செய்வேன்.
[கடைக்காரரிடம் மகேஷ் பேசுதல்]

கடைக்காரர்: தம்பி உனக்கு என்ன வேண்டும்?

மகேஷ்: ஐயா எனக்கு ............. வேண்டும்

கடைக்காரர்: ..........................................................................

மகேஷ்: ..........................................................................

# 16. நேர்மை

## ✦ வாசிப்போம் மகிழ்வோம்!

*[பேனா ஒன்று கீழே கிடக்கிறது. அதனை எடுத்துப் பையில் வைத்தவாறு ஆசிரியர் வகுப்புக்குள் நுழைகிறார்.]*



**மாணவர்:** மதிய வணக்கம் ஐயா

**ஆசிரியர்:** வணக்கம் குழந்தைகளே! அமருங்கள். அனைவரும் தமிழ் நோட்டுப் புத்தகத்தை எடுங்கள்.



**இரவி:** [சோகமாக] ஐயா, என்னுடைய பேனாவைக் காணவில்லை.

**ஆசிரியர்:** இரவி, இங்கே வா! அழாதே!

*[ஆசிரியர் பையில் இருந்து விலை உயர்ந்த பேனா ஒன்றை எடுக்கிறார்.]*



**ஆசிரியர்:** இரவி, இது உன்னுடைய பேனாவா? பார்.

**இரவி:** இல்லை, ஐயா



*[மீண்டும் ஆசிரியர் பையில் இருந்து சற்று விலை குறைந்த பேனா ஒன்றை எடுக்கிறார்.]*

**இரவி:** இல்லை, ஐயா

[மீண்டும் ஆசிரியர் பையில் இருந்து சற்று விலை குறைந்த பேனா ஒன்றை எடுக்கிறார்.]



**ஆசிரியர்:** இரவி. இது உன்னுடைய பேனாவா? என்று பார்.

**இரவி:** இல்லை, ஐயா இதுவும் என்னுடையது இல்லை.

[ஆசிரியர் இப்போது வாசலில் கிடைத்த இரவியின் பேனாவை எடுக்கிறார்.]

**ஆசிரியர்:** இது உன்னுடைய பேனாவா? பார்?



**இரவி:** [மகிழ்ச்சியாக]
ஆமாம் ஐயா! ஆமாம் ஐயா!
இது என்னுடைய
பேனா தான்.

**ஆசிரியர்:** நீ ரொம்ப நல்ல பையன் இரவி. உண்மையைக் கூறினாய். எல்லோரும் இரவிக்கு கைதட்டுங்கள். இரவி, நீ நேர்மையாக இருந்ததற்காக மூன்று பேனாக்களையும் பரிசாகத் தருகிறேன்.



**இரவி:** நன்றி, ஐயா!

**ஆசிரியர் குறிப்பு:** உண்மை பேசுதல், சுயக்கட்டுபாடு, இனியவை கூறல் போன்ற நல்ல பழக்கவழக்கங்களைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துக்கூறவும். முற்றுப் புள்ளி, கேள்விக்குறி உடைய வாக்கியங்களைக் குறிப்பேட்டில் எழுதக் கூறவும்.

## அ] பேசுவோம் வாருங்கள்.

1. இரவி ஏன் அழுதான்?
2. இரவியை ஆசிரியர் எதற்கு பாராட்டினார்?
3. ஆசிரியர் இரவிக்கு எத்தனை பேனாக்களைப் பரிசாக வழங்கினார்?
4. நல்ல மாணவன் / மாணவி என்று உன்னை ஆசிரியர் எப்போது பாராட்டினார்?

## ஆ] சொற்றொடரை வாசித்து சரி ✓ / தவறு ✗ என குறியிடுக.

1. பள்ளிக்குச் சரியான நேரத்தில் வர வேண்டும். ☐
2. உண்மை பேச வேண்டும். ☐
3. அதிகாலையில் கண் விழிக்க வேண்டும். ☐
4. பெற்றோருக்கு உதவி செய்ய வேண்டும். ☐
5. வேகவேகமாக உணவு உண்ண வேண்டும். ☐

## இ] இப்பாடத்தை வகுப்பறையில் நாடகமாக நடத்திக் காட்டவும்.

## ஈ] அறிவிப்பு பலகையை வாசித்து இன்னும் என்னென்ன தகவல்கள் தேவை எனகூறவும்.

**அறிவிப்புப் பலகை:**

இரண்டு குடைகள், ஒரு நோட்டு புத்தகம், ஒரு மழைக் கோட்டு இவை மைதானத்தில் கண்டு பிடிக்கப்பட்டன. தொலைத்தவர்கள் மூன்றாம் வகுப்பு பொறுப்பு ஆசிரியையிடம் விவரங்களைக் கூறி பெற்றுக் கொள்ளவும்.

# 17. வனவிலங்குகளைக் காப்போம்

## ✦ படத்தைப் பார்ப்பேன். கதையை வாசிப்பேன்!

காட்டின் வழியே சிலர் ஜீப்பில் செல்கின்றனர்.
அவர்கள் குப்பைகளையும் காலி பாட்டில்களையும்
காட்டில் வீசி எறிகின்றனர்.



அந்த வழியில் வந்த யானைக்கூட்டத்தில் ஒரு யானை
நடந்து செல்லும் போது பாட்டிலை மிதித்து விட்டது.















**ஆசிரியர் குறிப்பு:** மாணவர்கள் படங்களைப் பார்த்து தாமாகவே கதைகளை வாசிக்க உற்சாகப்படுத்த வேண்டும். வாசித்த கதைகளை வகுப்பில் உரத்த குரலில் கூற வாய்ப்பளித்தல்.

அ) பேசுவோம் வாருங்கள்.

1. குப்பைகளை கண்ட இடத்தில் வீசுவது சரியா தவறா என வகுப்பறையில் உரையாடுக.
2. ஜீப்பில் வந்தவர்கள் எதை வீசினார்கள்?
3. பெரியம்மா யானைக்கு என்ன குத்தியது?
4. மருத்துவரை அழைத்து வந்தது யார்?
5. விலங்குகளுக்கான மருத்துவரை என்ன என்று அழைப்பார்கள்?

ஆ) கேள்விகளை வாசித்து பதில் எழுதுக.

1. குப்பைகளை எங்கே போடவேண்டும்?

   ..........................................................

2. சுற்றுலா செல்லும் போது நீ கொண்டு செல்லும் ஏதேனும் மூன்று பொருள்களின் பெயரை எழுதுக.

   ..........................................................

3. இப்பாடம் உணர்த்தும் நீதி என்ன?

   ..........................................................



## வாசிப்புப் பகுதி



யானை ஒரு காட்டு விலங்கு ஆகும். அது நிலத்தில் வாழும் மிகப்பெரிய விலங்கு ஆகும். யானைகள் காடுகளில் கூட்டம் கூட்டமாக வாழும். யானை பெரிய உடலும், சிறிய கண்களும், தடித்த கால்களும்கொண்டது. தும்பிக்கை என்ற சிறப்பான உறுப்பும் இரண்டு பெரிய காதுகளும் உண்டு. ஆண் யானைக்குத்தந்தம் உண்டு.

யானை ஒரு தாவர உண்ணி ஆகும். அவை உணவைப்பற்ற, நீரை அருந்த, மூச்சு விட தும்பிக்கையைப் பயன்படுத்துகிறது. பழங்கள், கரும்பு, இலைகள், மரப்பட்டைகள் போன்றவற்றை விரும்பி உண்ணும். யானை ஒரு புத்திசாலி விலங்கு. யானையைக் கண்டால் அனைவரும் மனம் மகிழ்வர்.

1. யானையின் உடல் எப்படி இருக்கும்?
2. யானையின் உடலில் சிறப்பான உறுப்பு எது?
3. யானை எப்படிப்பட்ட விலங்கு?

# சுற்றுச்சூழல் காப்போம்.

✦ வாசிப்போம்! கடைப்பிடிப்போம்!



சுற்றுப்புறங்களை சுத்தமாக
வைத்திருப்போம்!



மரங்கள் வெட்டுவதைத்
தவிர்ப்போம்!



நெகிழிப் பைகளைப்
பயன் படுத்தமாட்டோம்!



குப்பையை குப்பை தொட்டியில்
தான் போடுவோம்.
குப்பையை அதிகப் படுத்தமாட்டோம்!



கண்ட இடத்தில்
எச்சில் துப்பமாட்டோம்!

# 18. அல்லிக்குளம்

✦ *வாசிப்போம்! மகிழ்வோம்!*

வள்ளி ஒரு சிறுமி. அவள் தோழியின் பெயர் மல்லி. இருவரும் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள். சேர்ந்தே விளையாடுவார்கள். சேர்ந்தே படிப்பார்கள். பள்ளிக்கும் சேர்ந்தே செல்வார்கள்.

ஒருநாள் இருவரும் வள்ளியின் அம்மாவுடன் பள்ளிக்கு சென்று கொண்டு இருந்தனர். வழியில் ஓர் அல்லிக் குளத்தைப் பார்த்தனர்.

வள்ளிக்கு அல்லி மலர் மீது ஆசை. வள்ளி, "அல்லி மலர்களைப்பறித்து வரட்டுமா?" என்று கேட்டாள்.



"வேண்டாம், குளம் ஆழமானது. நான் உங்களுக்கு மல்லிகைப்பூ வாங்கித் தருகிறேன்" என்று அம்மா கூறினார். "மல்லிகையா! அது மிகவும் மணமாக இருக்குமே! எனக்கு மிகவும் பிடிக்கும்!" என்று



வள்ளியின் தோழி மல்லி கூறினாள்.

அம்மா இருவருக்கும் மல்லிகைப்பூ வாங்கிக் கொடுத்தார். இருவரும் மகிழ்வோடு தலையில் சூடிக் கொண்டனர்.

## அ] பேசுவோம் வாருங்கள்.

1. உனக்கு தெரிந்த பூக்களின் பெயர்களைக் கூறுக.
2. பெண்கள் தலையில் சூடும் மலர்கள் யாவை?
3. குளத்தில் எந்த மலர்கள் மலர்ந்து இருந்தன?
4. அம்மா இருவருக்கும் என்ன பூ வாங்கிக் கொடுத்தார்?

## ஆ] விரைவாய் சொல்வேன், சரியாய் சொல்வேன்.

மழையில் நனைந்த எலி,
வளையில் நுழைந்தது - துள்ளி.

குலையில் பழுத்த வாழைப்பழங்களை,
இலையில் பரிமாறி உண்ண வேண்டும்.

**ஆசிரியர் குறிப்பு:** ல,ள,ழ வேறுபாடுகள் உள்ள சொற்களை வாசிக்கவும், சொல்லக் கேட்டு எழுதவும் பயிற்சிகள் கொடுக்க வேண்டும்.

## இ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.

(1) வள்ளியின் தோழி ......... (மள்ளி/மல்லி)

(2) குளத்தில் .......(அல்லி/அள்ளி) மலர்கள் மலர்ந்து இருந்தன.

(3) சுவற்றில் இருப்பது .......... (பல்லி/பள்ளி)

## ஈ) படங்களின் பெயரை எழுதுக.









சிலை ....லை ....லை ....லை

## உனக்குப் பிடித்த பூ ஒன்றை வரைந்து வண்ணமிடுக.





## வாசிப்புப் பகுதி



செஞ்சி நகரின் அருகில் தாமரைக்குளம் ஒன்று இருந்தது

அக்குளம் நீரால் நிறைந்து இருந்தது. குளத்தில் 

நிறைந்து காணப்பட்டன. கிராம மக்கள் இக்குளத்தை

 குளம் என்றே அழைத்தனர். அக்குளத்தில்

அதிகமான  இருந்தன.  அக்குளத்தில்

துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தன.

### வினாக்களுக்கு விடை அளிப்பேன்.

1] குளம் எங்கு இருந்தது?

2] குளத்தில் எந்தப் பூக்கள் நிறைந்து இருந்தன?

3] படங்களுக்குப் பதிலாக சொற்களை எழுதி பத்தியைத் திரும்ப எழுதுவேன்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

# 19. ரோஜாவுக்கு நன்றி

அலகு 4



## ✦ பாடி மகிழ்வோம்!

ஞாயிற்றுக்கிழமை - ஒரு
செடி வாங்கி வந்தேன் - ரோஜா
செடி வாங்கி வந்தேன்.





திங்கட்கிழமை - அதில்
மொட்டு வரக் கண்டேன் - சிறிய
மொட்டு வரக் கண்டேன்.

செவ்வாய்க்கிழமை- அது
பெரிதானதைப் பார்த்தேன் - மொட்டு
பெரிதானதைப் பார்த்தேன்.





புதன்கிழமை - அது
விரிந்ததைக் கண்டேன் - சற்றே
விரிந்ததைக் கண்டேன்.

வியாழக்கிழமை - அது
மலர்ந்ததைப் பார்த்தேன் - பூவாய்
மலர்ந்ததைப் பார்த்தேன்.



வெள்ளிக்கிழமை - பூவினை
பார்த்து ரசித்தேன் - பூவின்
அழகைப் பார்த்து ரசித்தேன்.



சனிக்கிழமை - அப்பூவைத்
தலையில் சூடக் கொடுத்தேன் - அம்மா
தலையில் சூடக் கொடுத்தேன்.

அம்மா உள்ளம் மகிழ
நானும் மகிழ்ந்தேன் - என்
உள்ளம் பொங்கி மகிழ்ந்தேன்.





மகிழ்ச்சி தந்த ரோஜாவுக்கு
நன்றி கூறினோம் - நாங்கள்
மகிழ்வுடன் நன்றி கூறினோம்.

***ஆசிரியர் குறிப்பு:*** எளிய பாடல்களை கேட்க வாய்ப்பளிக்கவும். அப்பாடல்களை விருப்பத்துடன் கேட்பதற்கான காரணத்தைக் கூற சொல்லவும்.

அ) பேசுவோம் வாருங்கள்.

1. ஒரு வாரத்திற்கு எத்தனை நாட்கள்?
2. வாரத்தின் முதல் நாள் என்ன கிழமை?
3. ரோஜா செடியை எந்த கிழமை வாங்கி வந்தான்?
4. வியாழக்கிழமை செடியில் என்ன பார்த்தான்?

ஆ) ஞாயிற்றுக் கிழமையில் நீ செய்யும் செயல்களை குறியிடு.



விளையாடுதல் ☐



வீட்டு வேலையில் உதவுதல் ☐



தொலைக்காட்சி பார்த்தல் ☐



ஓவியம் வரைதல் ☐

இ) வார நாட்களின் பெயர்களை வரிசையாக எழுதுக.

.................... .................... ....................

.................... .................... ....................

....................

## ஈ) படங்களை பார்த்து நிகழ்வின் வரிசைப்படி எண்களை எழுதுக.



## உ) படங்களுக்கான சொற்றொடரை வரிசைப்படி எழுதுவேன்.

1. ...........................................................
2. ...........................................................
3. ...........................................................
4. ...........................................................



### வாசிப்புப் பகுதி



திங்கள்கிழமை திருக்குறள் படிப்போம். செவ்வாய்க்கிழமை செய்யுள் படிப்போம். புதன்கிழமை புதியன கற்போம். வியாழக்கிழமை விளையாடி கற்போம். வெள்ளிக்கிழமை வெற்றி பெறுவோம். சனிக்கிழமை சதுரங்கம் விளையாட கற்போம். ஞாயிற்றுக்கிழமை ஞாயிறைப் போற்றுவோம்.

1. வெள்ளிகிழமை நீங்கள் என்ன செய்வீர்கள்?
2. எந்தக் கிழமை சதுரங்கம் விளையாட கற்பீர்கள்?

**ஆசிரியர் குறிப்பு:** படங்களை வரிசைப்படுத்தி சொற்றொடர்கள் எழுதவும் வெவ்வேறு நிகழ்வுகளின் பட அட்டைகள் கொடுத்து மகிழ்ச்சியோடு பங்கேற்க மாணவர்களை உற்சாகப் படுத்தவும்.



# 20. பூசணிக்காய் வீடு

## ✦ வாசிப்போம் மகிழ்வோம்!

**ஆசிரியை:** குழந்தைகளே! கயிறு நூலகத்தில் புத்தகங்களை வைத்திருக்கிறேன். உங்களுக்கு பிடித்த புத்தகங்களை எடுத்து அவரவர் இடத்தில் அமர்ந்து படியுங்கள்.




[சிறிது நேரம் கழித்து]

**ஆசிரியை:** எல்லோரும் இங்கே கவனியுங்கள். நீங்கள் படித்த புத்தகங்களில் இருந்து கதைகளை ஒவ்வொருவராக முன்னால் வந்து வாசியுங்கள். வாசித்த பின் புத்தகங்களை எடுத்த இடத்தில் வைத்து விட்டு அவரவர் இடத்தில் சென்று அமருங்கள்.

[மாணவர்கள் ஆசிரியர் அருகில் வருகின்றனர்]

**ஆசிரியை:** முதலில் படிக்க போவது யார்?

**வசந்தி:** நான் வரட்டுமா தமிழ் அம்மா?

**ஆசிரியை:** சரி வசந்தி நீ முதலில் வந்து படி. மற்றவர்கள் பின்னால் வரிசையாக வாசித்து விட்டு அமருவர்.

**வசந்தி:**

ஒரு கிராமத்தில் ஒரு பெரிய  வீடு இருந்தது.

அந்த வீட்டிலே  அப்பா, அம்மா இருந்தார்கள்.

அண்டை வீட்டுக்காரருக்கு இரண்டு அழகான 

மகள்கள் இருந்தார்கள். அடுத்த வீட்டு  பாட்டி

எப்போதும் வாசல் அருகில் கட்டிலில் படுத்திருப்பார்கள்.

அவர்கள் வீட்டைச் சுற்றி  வேலி போட்டு

வைத்திருந்தார்கள். பக்கத்து  வீட்டில்

 அப்பா, அம்மா இருந்தார்கள். அவர்கள் 

பிள்ளைகள் மீது மிகவும் பாசமாக இருந்தார்கள். 

அனைவரும் சேர்ந்து விளையாடுவார்கள்.

ஒரு நாள் இரவு  திருடர்கள்  வீட்டில்

புகுந்து விட்டார்கள்.

உடனே  பாட்டி  திருடர்களை பார்த்து
சத்தம் போட்டார்கள்.  போலீஸ் காரரைக் கூப்பிட்டார்கள்.
போலீஸ்காரர் அந்த திருடர்களை  ஜெயிலில் போட்டார்.
உருளைக்கிழங்கு பூட்டை வைத்து பூட்டினார்.

## அ] பேசுவோம் வாருங்கள்.

1. உனக்குப் பிடித்த காய்கறிகளின் பெயர்களை கூறு.
2. வீடு எதைப் போன்று இருந்தது?
3. எந்த காய்களை நீ அப்படியே பச்சையாக உண்ணுவாய்?
4. அம்மாவுடன் காய்கறி கடைக்கு நீ சென்று இருக்கிறாயா? அந்த அனுபவத்தை கூறு.

## ஆ] கேள்விகளை வாசிப்பேன்; விடை எழுதுவேன்.

1. பாகற்காய் பாட்டி எங்கே படுத்து இருந்தார்கள்?

.......................................................................

.......................................................................

.......................................................................

2. வீட்டைச் சுற்றி என்ன வேலி போட்டு இருந்தார்கள்?

.......................................................................

.......................................................................

.......................................................................

**ஆசிரியர் குறிப்பு:** பலவிதமான நூலகப் புத்தகங்களை மாணவர்கள் வாசிப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். வாசித்த கதைகளை உரத்த குரலில் வகுப்பில் கூற ஊக்குவிக்கவும்.

## ✦ நிபந்தனைகளோடு கூடிய அறிவுரைகளை வாசித்து எழுதுக.

நாம் உயிர்வாழ உணவு மிகவும் அவசியம் ஆகும்.
ஆனால் ...
அந்த உணவு சத்தான உணவாக இருக்கவேண்டும்.
தகுந்த வேளையிலும் அளவோடு சாப்பிட வேண்டும்.



பண்டிகை நாட்களில் உன் அம்மா பல திண்பண்டங்கள் செய்து வைத்து உள்ளார்கள். அதனோடு, தினமும் செய்யும் சாப்பாடும் செய்து உள்ளார்கள். நீ என்ன செய்வாய்?

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

# 21. மும்பை சுற்றுலா



✦ *வாசிப்போம் மகிழ்வோம்!*

*[கதிரவனையும் அவனது தங்கை செல்வியையும் அத்தை சுமதி, மும்பையைச் சுற்றிப்பார்க்க அழைத்துச் செல்கிறார். சத்ரபதி சிவாஜி மகாராஜ் இரயில் நிலையத்தில் இறங்கினர்]*



**அத்தை:** அனைத்து ஊர்களுக்கும் செல்லும் இரயில்கள் இங்கிருந்து தான் புறப்படுகின்றன. வாருங்கள்! அந்த பேருந்தில் ஏறி 'கேட்வே ஆப் இந்தியா' போகலாம்.

**செல்வி:** அப்படியா?

**கதிரவன்:** எவ்வளவு பெரியதாக இருக்கிறது!



**அத்தை:** முதலில் 'கேட்வே ஆப் இந்தியா' எதிரில் புகைப்படம் எடுக்கலாம். பிறகு படகு சவாரி போகலாம்.

**கதிரவன்:** படகு சவாரி போகலாமா?

**செல்வி:** இவை என்ன பறவைகள்?

**அத்தை:** இவை கடற் பறவைகள். இவற்றை கடற்காகம், கடற்புறா என்றும் கூறுவார்கள்.





மீண்டும் 'கேட்வே ஆப் இந்தியா' அருகில்



**கதிரவன்:** அடுத்து எங்கே போகப் போகிறோம்?

**செல்வி:** எங்களுக்கு கால் வலிக்கிறது அத்தை.

**அத்தை:** சரி. கொஞ்ச நேரம் உட்காரலாம். அப்புறம் பூட் ஹவுஸ் போகலாம்.



**அத்தை:** அதன் பிறகு சௌபாட்டி பீச்சிற்குப் போகிறோம்.

**செல்வி:** அத்தை! 'சாட்' சாப்பிடலாம்.



கடற்கரைக்கு சென்று வந்த நண்பரிடம் கேள்விகள் கேட்டு விவரங்கள் அறியவும்.

**ஆசிரியர் குறிப்பு:** இதைப் போன்ற பல நிகழ்வுகளை அனுபவங்களை கூறவும் எழுதவும் மாணவர்களை உற்சாகப்படுத்தவும்.

## அ] பேசுவோம் வாருங்கள்.

1. நீ உன் பெற்றோரோடு எங்கெந்த இடங்களுக்கு சுற்றுலா சென்றுள்ளாய்?
2. அத்தை யார் யாரை மும்பை சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றார்?
3. முதலில் அவர்கள் சென்ற இடம் எது?
4. அவர்கள் பார்த்த பறவைகளின் பெயர் என்ன?
5. கதிரவனும் செல்வியும் மும்பையில் சென்ற இடங்கள் யாவை?

.........................................................................................

.........................................................................................

## ஆ] தானியங்கி பண இயந்திரத்தில் பணம் எடுக்கும் தாய்-மகன் உரையாடலை கற்பனை செய்து எழுதுக.




அம்மா: ..............................

.........................................

மகன்:..............................

.........................................

அம்மா:..............................

.........................................

மகன்:..............................

.........................................

.........................................

.........................................

.........................................

# 22. கோடை விடுமுறை

## ✦ வாசிப்போம் மகிழ்வோம்!

*[அகிலனும் யாழினியும் கோடை விடுமுறைக்கு தாத்தா வீட்டிற்குச் சென்றனர். அவர்களுக்கு கிராமத்தில் பல விஷயங்கள் புதுமையானதாகவும், வியப்பு ஊட்டுவதாகவும் இருந்தன. மக்கள் வயல்களில் வேலை செய்தல், ஆற்றில் குளித்தல், தென்னை மரம் ஏறுதல் போன்ற விஷயங்களைக் கண்டு இருவரும் மகிழ்ந்தனர். ஒரு நாள் தாத்தா .....]*



**தாத்தா:** யாழினி, அகிலன் வாருங்கள்! நாம் வாரச் சந்தைக்கு போகலாம்.

**அகிலன்:** வாரச்சந்தை என்றால் என்ன தாத்தா?

**தாத்தா:** வயல்களில் விளைந்த பொருள்களை விற்கவும், வாங்கவும் மக்கள் கூடும் இடம் வாரச்சந்தை ஆகும்.

**யாழினி:** வாரம் ஒருமுறை தான் பொருள்களை வாங்க முடியுமா தாத்தா?



**தாத்தா:** ஆமாம்! குழந்தைகளே!

**யாழினி:** மும்பை பேரங்காடியில் எல்லா நாட்களிலும் பொருள்களை வாங்கலாம் தாத்தா.

**அகிலன்:** தாத்தா! மிட்டாய், பொம்மை, துணிக்கடைகள் கூட இருக்கிறதே!

**யாழினி:** அண்ணா, அதோ பார்! விளையாட சுழல் ராட்டினம் உள்ளது.

**அகிலன்:** என்ன இது சிறியதாக இருக்கிறதே!

**தாத்தா:** ஆமாம். இதை கையால் தான் சுழற்றுவார்கள்.

யாழினி: தாத்தா, நான் இதில் உட்கார்ந்து கொள்ளட்டுமா?

[யாழினியும் அகிலனும் சுழல் ராட்டினத்தில் உட்கார்ந்து மகிழ்தல்]

வீட்டுக்குத் தேவையான பொருள்களையும், குழந்தைகளுக்கு பொம்மை, மிட்டாய் ஆகியவற்றையும் மக்கள் அனைவரும் வாங்கிக் கொண்டுச் சென்றனர்.

## அ] பேசுவோம் வாருங்கள்.

1. கோடை விடுமுறைக்கு அகிலனும் யாழினியும் எங்கு சென்றனர்?
2. வாரச் சந்தையில் என்னென்ன கடைகள் இருந்தன?
3. அகிலனும், யாழினியும் கிராமத்தில் எவற்றைப் பார்த்தனர்?
4. கிராமத்திற்கு நீ சென்று இருக்கிறாயா? அந்த அனுபவத்தைக் கூறுக.

## ஆ] கோடை விடுமுறையில் கிராமத்திற்கு நீ சென்று என்னென்ன செய்வாய் என்பதை 5 அல்லது 6 வரிகளில் ஒரு பத்தி எழுதுக.

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................

இ) வகைப்படுத்துக. எங்கு உள்ளது? கிராமத்திலா, நகரத்திலா?

**சந்தை, இயங்கும் படிக்கட்டு, பேரங்காடி, சுழல்ராட்டினம், மின்தூக்கி, வயல்**

| கிராமம் | நகரம் |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |

## கிராமியக் கலைகளின் பெயர்களை அறிவேன்.


சிலம்பாட்டம்


மயிலாட்டம்


காவடியாட்டம்


கரகாட்டம்

**ஆசிரியர் குறிப்பு:** தங்களது அனுபவங்களின் அடிப்படையில் படங்களை துணையாகக் கொண்டு பத்திகளை எழுத ஆசிரியர் மாணவர்களுக்கு உதவவேண்டும்.

# 23. டிஜிட்டல் வகுப்பறை



✦ *விளையாடி கற்போம்!*



**ஆசிரியை:** வணக்கம் குழந்தைகளே! இன்று நாம் டிஜிட்டல் திரையில் பாடம் படிப்போமா?

**மாணவர்கள்:** சரி, தமிழ் அம்மா! என்ன பாடம் அம்மா?

**ஆசிரியை:** உங்களுக்கு விடுகதைகள் பிடிக்குமா?

**மாணவர்கள்:** பிடிக்கும் அம்மா!

**ஆசிரியை:** இதோ பாருங்கள். டிஜிட்டல் திரையில் விடுகதைகளை ஒவ்வொன்றாக காட்டுவேன். நீங்கள் அதைப்படித்து விடையை கண்டு பிடிக்க வேண்டும்.

**மாணவர்கள்:** சரி, அம்மா! விடை தெரியாவிட்டால்?

**ஆசிரியை:** முயற்சி செய்யுங்கள்! விடைக்கான குறிப்பை படமாக திரையில் காட்டுவேன்.

**ஜேம்ஸ்:** நன்றி அம்மா, நான் தான் முதலில் விடையைக் கண்டுபிடிப்பேன்.

**ஆசிரியை:** யார் வேண்டுமானாலும் கூறலாம். ஆனால் ஒவ்வொருவராகக் கூறவேண்டும். முதல் விடுகதையைப் படியுங்கள். பார்க்கலாம்.

[திரையில் எழுத்துகள் ஒளிர்கின்றன.]

ஒற்றை காலில் சுற்றுவேன்
ஓய்ந்து போனால் படுத்து விடுவேன்- **நான் யார்?**

**மாதவி:** பம்பரம் தானே, அம்மா?

**ஆசிரியை:** சரியான விடை, மாதவி! எல்லோரும் ஒருமுறை கை தட்டுங்கள் பார்ப்போம்!

[அனைவரும் கை தட்டுகின்றனர்]

**ஆசிரியை:** அடுத்த விடுகதையைப் படிக்கலாமா?

எத்தனை முறை சுற்றினாலும்,
எனக்கு தலை சுற்றாது ...... **நான் யார்?**

எனக்கு பல் உண்டு,
ஆனால் கடிக்க மாட்டேன் ..... **நான் யார்?**

மாணவர்கள் அனைவரும் ஆர்வத்தோடு விடுகதைகளை வாசிக்கிறார்கள். திரையில் காண்பிக்கப்படும் படங்களைக் கொண்டு விடையைக் கண்டுபிடித்து சொல்கிறார்கள்.

**ஆசிரியர் குறிப்பு:** டிஜிட்டல் வகுப்பறையை பயன்படுத்தி கற்க மாணவர்களை உற்சாகப்படுத்தவும். ஆசிரியர் கூறும் கலைச் சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதச் சொல்லவும்.

அ) பேசுவோம் வாருங்கள்.

1. உனக்கு விடுகதைகள் பிடிக்குமா?
2. உன் வீட்டில் நீ யாருடன் விடுகதைகள் கேட்டு மகிழ்வாய்?
3. உன் வகுப்பில் டிஜிட்டல் திரை உள்ளதா?
4. உங்கள் வகுப்பு ஆசிரியை எந்தெந்தப் பாடங்களை டிஜிட்டல் திரையில் கற்பிப்பார்?



செயல்: டிஜிட்டல் திரையில் பார்த்த ஏதேனும் ஒரு கதையை எழுதுக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

ஆ) சிந்தித்து விடை எழுதுவேன்.

1. டிஜிட்டல் திரையில் பாடல்களை கற்க உனக்கு விருப்பமாக உள்ளதா? ஏன்?

..............................................................................................

2. டிஜிட்டல் திரையில் எந்த பாடங்களைப் படிக்க நீ விரும்புகிறாய்?

..............................................................................................

இ) கீழ்க்காணும் சொற்களின் தமிழ்ச் சொற்களையும், ஆங்கிலச் சொற்களையும் சொல்லக்கேட்டு எழுதுவேன்.

இன்டெர்நெட் - இணையம்
பாஸ்வெர்ட் - கடவுச்சொல்
வீடியோ - காணொளி
ஸ்கீரின் - திரை
யூடியூப் - வலையொளி

## ஈ) செய்தித்தாள் கத்தரிப்பிலுள்ள விடுகதைகளை வாசிப்பேன்! விடையைக் கண்டுபிடித்து எழுதுவேன்.

மூன்று கண்ணுண்டு
ஆனால் பார்க்க முடியாது.
மட்டை உண்டு
ஆனால் அடிக்க முடியாது.
நான் யார்?

பத்துச்சட்டை அணிந்தவன்
சட்டையைக் கழற்றினால்
அழ வைப்பவன்.
நான் யார்?

கொண்டையிலே சிவப்புப்பூ
வைத்திருப்பான்.
காலையிலே கூவுவான்
அவன் யார்?

தண்ணீரில் உருவானவன்
தண்ணிரிலே அழிந்தான்
அவனின்றி உணவில்
சுவை இல்லை.
நான் யார்?



### வாசிப்புப் பகுதி



உணவு, உடை, மின்னணு சாதனங்கள் உட்பட பல்வேறு பொருள்களையும் விற்பனை செய்யும் கடைகள் உள்ள இடமே பேரங்காடி ஆகும். மும்பை,சென்னை போன்ற பெருநகரங்களில் பேரங்காடிகள் பல உள்ளன. நகர மக்கள் பொருள்களை வாங்க பேரங்காடிக்குச் செல்வர். அங்கே குளிர்சாதன வசதிகளோடு கூடிய கடைகள் இருக்கும். பேரங்காடிகளில் மூன்று அல்லது நான்கு தளங்களில் கடைகள் இருக்கும். ஒரு தளத்தில் இருந்து மற்றொரு தளத்திற்குச் செல்ல மின் தூக்கிகளும், நகரும் படிக்கட்டுகளும் உள்ளன. பேரங்காடிக்குச் சென்று பொருள்களை வாங்குவது ஒரு மகிழ்வான அனுபவம் ஆகும்.

1. பேரங்காடி எங்கே உள்ளன?
2. பேரங்காடி எப்படி இருக்கும்?
3. பேரங்காடிக்குச் சென்ற உன் அனுபவத்தைக் கூறுக.

# 24. கவிதாவின் பரிசு



## ✦ வாசித்து மகிழ்வோம்!

[கவிதா இரண்டாம் வகுப்பு படிக்கும் சிறுமி ஆவாள். கவிதாவின் அப்பா அழகுமணி. இன்று அவள் அப்பாவின் பிறந்த நாள் ஆகும். கவிதா அப்பாவிற்கு 'என்ன அன்பளிப்பு தரலாம்' என்று யோசித்தாள்]



கவிதா குளக்கரைக்குச் சென்றாள். அங்கே விழுதுகளுடன் அடர்ந்து பரந்து நின்ற ஆலமரத்திடம், "ஆலமரமே! ஆலமரமே! என் அப்பாவுக்கு பிறந்த நாள் பரிசளிக்க உன்னை விட அடர்ந்த பரந்த பொருள் ஒன்று சொல்" என்று கேட்டாள். அதற்கு ஆலமரம் அங்கும் இங்கும் பார்த்தது. பின் எனக்குத் தெரியவில்லை என்றது.



அடுத்ததாக கவிதா தன் வீட்டுக் கொல்லையில் கொத்துக் கொத்தாய் காய்த்து இருந்த முருங்கை மரத்திடம், "முருங்கை மரமே! முருங்கை மரமே! என் அப்பாவுக்கு பிறந்த நாள் பரிசளிக்க உன்னை விட சிறப்பு மிக்க பொருள் ஒன்று சொல்" என்று கேட்டாள். முருங்கை மரமோ மேலும் கீழும் பார்த்தது. அதற்கும் தெரியவில்லை.

கவிதா ஆற்றங்கரைக்குச் சென்றாள். அங்கே நின்ற உயரமான தென்னை மரத்தைப் பார்த்து, "தென்னை மரமே! தென்னை மரமே! என் அப்பாவுக்கு பிறந்த நாள் பரிசளிக்க உன்னை விட உயரமான பொருள் ஒன்று சொல்" என்று கேட்டாள். தென்னை மரம் திரு திரு என விழித்தது. அது கவிதாவைப் பார்த்து "ஆலமரத்திடம் கேள்" என்றது.



மாலை நேரம் வந்து விட்டது. வீடு விழாக்கோலம் பூண்டது. கவிதா சற்று சிந்தித்தாள். 'சிறந்த பரிசு என்பது உயரத்திலோ, உருவத்திலோ அல்ல அது உணர்வைப் பொருத்தது' என்பதை உணர்ந்தாள். தன் விருப்பப்படி ஒரு சிறந்த பரிசை தன் அப்பாவிற்கு வழங்கினாள்.

**ஆசிரியர் குறிப்பு:** வாசிக்கும் பொழுதும், கதைகளைக் கூறும் பொழுதும் சரளமாக தொடர்ந்து பேச மாணவர்களை ஊக்கப்படுத்தி அனைவருக்கும் வாய்ப்புகள் தரவும். கதையை உரையாடலாக எழுதச் சொல்லவும்.

அ) பேசுவோம் வாருங்கள்.

1. உன்னுடைய பிறந்த நாளை நீ எவ்வாறு கொண்டாடினாய்?
2. உன்னுடைய அம்மாவின் பிறந்த நாளன்று நீ என்ன பரிசு கொடுத்தாய்?
3. தென்னை மரம் கவிதாவுக்கு என்ன பதில் சொன்னது?
4. கவிதா அப்பாவுக்கு என்ன பரிசு கொடுத்தாள்?

ஆ) சரியான சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. விஜயா பூ .......... வாங்கினாள் / வாங்கினான்.
2. பரதன் எழுதுகோலால் ......... எழுதினான் / எழுதியது.
3. மாணவர்கள் கைப்பந்து......... விளையாடினான் / விளையாடினர்.
4. அன்னப்பறவை நீரில் ............. நீந்துகிறது / நீந்துகிறான்.
5. நட்சத்திரங்கள் வானில் .......... மின்னுகின்றன / மின்னுகிறது.

இ) குழந்தைகளே! கவிதா தன் அப்பாவிற்கு என்ன பரிசு வழங்கியிருப்பாள்? - சிந்தித்து எழுதுங்கள்.

............................................................................

............................................................................

............................................................................

............................................................................

## ஈ] மரங்கள் தரும் பரிசுகளை இணைக்க:

| | |
|---|---|
| தென்னை | நுங்கு |
| வாழைமரம் | தேங்காய் |
| பனைமரம் | மாம்பழம் |
| மாமரம் | வாழைப்பழம் |

## உ] உன்னுடைய தோழன் / தோழிக்குப் பிறந்தநாள் பரிசாக என்ன கொடுக்க விரும்புவாய்? வட்டமிடுக.

பொம்மை அலமாரி பென்சில்

நாற்காலி சாக்லேட்

**செயல்: தொகுப்பு ஏடு** தயாரிப்பேன்; செய்திகளைத் திரட்ட பள்ளி நூலகத்தைப் பயன்படுத்துவேன்.

### மரங்கள்



**பெயர்:** பனை மரம்

**பார்த்த இடம்:** தாத்தா வீட்டு தோப்பு

**பார்த்த நாள்:** 05.05.2026

**பயன்கள்:** பனை ஓலை, வீட்டுக்கூரை, முறம், விசிறி, பாய், விளையாட்டு பொருட்கள் ஆகியவற்றை தயாரிக்க உதவும்.

**நுங்கு, பனங்கிழங்கு,** பனம்பழம் ஆகியவற்றை நாம் விரும்பி உண்ணலாம்.

***மாணவர் குறிப்பு:*** *நீங்கள் பார்த்த வாழை மரம், வேப்ப மரம் ஆகியவற்றின் படங்களை ஒட்டி மேலே காட்டியது போல்* ***தொகுப்பு ஏடு*** *தயாரிக்கவும். தேவையான தகவல்களை நூலகத்திலுள்ள புத்தகங்களிலிருந்து சேகரிக்கவும். நூல்களை ஒழுங்காக பராமரிக்கவும். ★ இதே போன்று செய்தித்தாள் கத்தரிப்புகளை வைத்து தொகுப்பேடு செய்யவும்.*



# அகராதி

அகராதி என்பது சொற்களை அகரவரிசையில் தொகுத்து அதன் பொருளைத் தரும் நூல் ஆகும்.

1. அன்னை - அம்மா
2. ஆடை - உடை
3. இரக்கம் - பரிவு
4. ஊக்கம் - முயற்சி
5. கருமம் - செயல்
6. கீதம் - பாடல்
7. சித்திரம் - படம்
8. சுற்றம் - உறவினர்
9. தந்தை - அப்பா
10. தாய் - அம்மா
11. திரவியம் - செல்வம்
12. தீரம் - வீரம்
13. நூல் - புத்தகம்
14. நேர்மை - உண்மை
15. பருகுதல் - குடித்தல்
16. பிதா - அப்பா
17. பிம்பம் - பிரதிபலிப்பு
18. பிற்பகல் - மாலை வேளை
19. பின்னோர் - வழித்தோன்றல்
20. மலர் - பூ
21. முன்னோர் - மூதாதையர்
22. முற்பகல் - காலை வேளை
23. மூத்தோர் - முதியவர்

**அன்பு குழந்தைகளே!**

**யாராவது ஒருவர் உங்களை தவறான முறையில் தொடுவதைப் பற்றி நீங்கள் சங்கடமாக உணர்ந்தால், நீங்கள் அமைதியாக இருக்க வேண்டாம். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால்.**

1. **உங்களை நீங்களே குறை சொல்லாதீர்கள்.**
2. **நீங்கள் நம்பும் ஒருவரிடம் சொல்லுங்கள்.**
3. **நீங்கள் போக்சோ மின்னஞ்சல் பெட்டி மூலம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு புகார் தெரிவிக்கலாம்.**

**நீங்கள் ஒரு பாதுகாப்பற்ற தொடுதலைப் பெறும்போது, நீங்கள் மோசமாகவும், குழப்பமாகவும் மற்றும் உதவியற்றவராகவும் உணரலாம்.**
**நீங்கள் மோசமாக உணர வேண்டியதில்லை. ஏனெனில் அது உங்கள் தவறு அல்ல.**




இந்த பொத்தானை அழுத்தவும்

POCSO e-box ncpcr@gov.in ல் கிடைக்கும்

**நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராகவோ, துன்பப்படுத்தப்பட்டவராகவோ, குழப்பத்திற்கு உட்பட்டவராகவோ, தவறான நேர்மையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டவராகவோ, மனக்கலக்கத்திற்கு உட்பட்டவராகவோ அல்லது அப்படிப்பட்ட துன்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அறிந்தவராகவோ இருந்தால் ....**

1098 என்ற எண்ணுக்கு அழைக்கவும்...
அது உங்கள் வாழ்க்கையையும் உங்கள் நண்பர்களின் வாழ்க்கையையும் மாற்றக்கூடும்.

CHILD LINE
1098
NIGHT & DAY

**துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைபேசி சேவையான சைல்ட்லைன் 1098, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் சைல்ட்லைன் இந்திய நிறுவனத்தின் முன்முயற்சியாகும்.**

புதிய விடியலை நோக்கி

**ஆசிரியர் குறிப்பு :** நல்ல தொடுதல்-கெட்ட தொடுதல் (குட் டச்-பேட் டச்) குறித்து மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்



# राज्यगीत

जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।धृ।।

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।१।।

काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ।।२।।



மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே
बालभारती इयत्ता दुसरी (तमिळ)
₹ 64.00